Registered as a News Paper
பொழிவு: 27
குவிப்பு: 05
பக்கங்கள்: 08
விலை: 50/-
ஆவணி: 2022

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"

## மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா





மன்னார் மறைமாவட்டத்தின் இதயமென விளங்குகின்ற எமது மறைமாவட்ட பாதுகாவலியும் உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற யாத்திரை ஸ்தலமாகிய மடுத்திருத்தல திருவிழாவானது கடந்த ஆவணி மாதம் 15ம் திகதி கொண்டாடப்பட்டது. இப்பதியிலே மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் அநுராதபுர மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. நோபட் அன்றாடி அவர்களும் இன்னும் சகல மறை மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த குருக்கள், துறவிகள், அனைவரும் இணைந்து நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட இறைமக்களோடு கூட்டுத்திருப்பலியாக திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதற்கு சகல ஒழுங்குகளையும் அரச ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இன்னும் மடு பரிபாலகர், குருக்கள் குழாம் இணைந்து செயற்படுத்தி நல்ல முறையிலே திருவிழாத் திருப்பலி நடைபெற்றது.

## பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா மற்றும் திருப்பண்டப் பவனி நிகழ்வு











மன்னார் மறைமாவட்ட யாத்திரை ஸ்தலங்களிலே பிரசித்தி பெற்ற இன்னுமொரு யாத்திரை ஸ்தலமான பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாத்திருப்பலி கடந்த ஆவணி மாதம் 6ம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் குருக்கள் ஒன்றிணைந்து இறைமக்களுடன் சேர்ந்து கொண்டாடப்பட்டது.

07

மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் அயராத உழைப்பினால் எமது மறைமாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட புனித அந்தோனியாரின் திருப்பண்டம் (எலும்பு) கடந்த யூலை 28ம் திகதி மாலை 3.30 மணியளவில் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து பவனியாக எடுத்து வரப்பட்டு பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் வணக்கத்திற்கு வைக்கப்பட்டது.

07

## தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலய திருவிழா



கடந்த 22.08.2022 அன்று வேதசாட்சிகளின்இராக்கினி அன்னை ஆலய திருவிழா கொண்டாடப் பட்டது. இந்த வேத சாட்சிகளின் இராக்கினிப் பெருவிழாவை மன்னார் மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வரும், தற்போதைய இளைஞர் ஆணைக்குழு இயக்குநரு-மான அன்பிற்கும் பெரும் மதிப்புக்குரிய அருட்பணி அ.விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

03

## 18வது புதுப்படைப்பு ஜெபக்குழு ஆண்டு விழா



வேதசாட்சிகளின் விசுவாசத்தின் விளை நிலமாகவும், எமது மறைமாவட்டத்தின் இதயமாக விளங்கும், மருதமடு அன்னையின் பாதுகாவலிலும், மனித நேய மாண்புகளோடும் வாழுகின்ற, மன்னார் மறைமாவட்ட திருச்சபையின் பழமை வாய்ந்த பங்குகளில் தனக்கென்று தனித்துவமான பண்புகளோடும், யேசுவின் வளர்ப்புத் தந்தையாம் புனித சூசையப்பரின் எல்லையில்லா அன்பு கொண்டும் அவருடைய பரிந்துரையிலும் ஈடிணையற்ற பாதுகாப்பிலும் "தாழ்வுபாடு" பங்கு என்னும் நாமத்தில் வாழுகின்ற மக்கள் நாம்.

06

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

**“அல்லல்களால் (துன்பங்களால்)**
**எம் ஆன்மீக வாழ்வு ஆழப்படுத்தபடுகின்றதே அன்றி**
**அழிக்கப்படுவதில்லை”**

இறை உறவில் எம்மோடு இணைந்துள்ள அன்பு வாசக நெஞ்சங்களே! மீண்டும் ஓர் புதிய மாதத்தில் புத்துணர்வோடு உங்களை வாழ்த்தி நிற்கின்றேன். எம் வாழ்விலே நாம் எழுச்சி பெற முடியாதவாறு எம்மை சூழ துன்பங்களும், நோய் நொடிகளும், வறுமை, பொருளியல் மேலாண்மையும் நிறைந்துள்ள இந்நாட்களில் பயணித்து கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் எம் விசுவாச வாழ்வையும் சற்று உற்று நோக்குவோம். தூய பவுல் தனது கடிதத்தில் குறிப்பிடுவது போல கிறிஸ்துவின் நிலையான அன்பில் இருந்து எம்மை பிரிக்கக்கூடியது எது? வாழ்வா? சாவா? வானதூதரா? வறுமை, நோய், பட்டினி, ஆடையின்மையா? எதுவும் அவர் அன்பில் இருந்து எம்மை பிரிக்கவே முடியாது என்ற மனநிலையுடன் நாம் தொடர்ந்தும் பயணிப்போம். துன்பங்களினால் எமது கிறிஸ்தவ வாழ்வானது இன்னும் ஓர் மிகப்பெரிய சான்றாக எம் மறைமாவட்டத்தின் இதயமாகிய மடு அன்னையின் “ஆவணி விண்ணேற்பு பெருவிழா” அமைந்திருந்ததை காண முடிகின்றது. எம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் இன, மத, மொழி, சாதி என்ற வேறுபாடு இன்றி அன்னையின் அருள் வேண்டி அவள் பாதம் வந்து நல்லாசீர் பெற்று கொண்டார்கள். எம்மை சூழ எம் நாட்டில் நடை பெற்று வரும் அடக்குமுறைகள், அநீதியான செயற்பாடுகள் மத்தியில் பல இலட்ச கணக்கிலான இறைபக்தர்கள் இப்பதியில் ஒன்றுகூடி வந்திருந்ததை எம்மால் காண முடிந்தது. ஆகவே எம்மையும் எம் தேசத்தையும் நாம் எம் அன்னையின் இதய அன்பு பரிந்துரையின் கீழ் ஒப்புக்கொடுத்து தொடர்ந்து மனம் தளராமல் இறை விசுவாச பயணத்தில் பயணிப்போம்.

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

# மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் றஞ்சித் ஆண்டகை ஆற்றிய மறையுரையின் சிறுதொகுப்பு



கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! வரலாற்று சிறப்பு மிக்க மடு அன்னையின் திருப் பதியிலே ஒன்றிணைந்து பெருவிழா திருப்பலியிலே பங்குபற்றிக் கொண்டிருக் - கின்ற அன்பார்ந்த மடு அன்னையின் பக்தர்களே, இத்திருப்பலிக்கு சமூகம் அளிக்க முடியாததன் காரணத்தினால் சமூக ஊடகங்கள் மூலமாக திருப்பலியைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற அன்பார்ந்த பக்தர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் பெருவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இன்று திருஅவையானது மரியாளின் விண்ணேற்புப் பெருவிழாவை கொண்டாடுகின்றது. மரியாள் தொடர்பாக திருஅவையானது இதுவரைக்கும் நான்கு கோட்பாடுகளை விசுவாச உண்மையாக முன்வைத்து அவற்றைப் பகிரங்கமாக பிரகடணம் செய்துள்ளது.

“மரியாள் இறைவனின் தாய்” என்று 431ஆம் ஆண்டும், “மரியாள் என்றும் கன்னிகை” என்று 553ஆம் ஆண்டும், “மரியாள் அமலவுற்பவியாக பிறந்தவள்” என்று 1854ம் ஆண்டும் பிரகடனம் செய்த திருஅவையானது இம்மூன்று கோட்பாடுகளையும் அடித்தளமாக வைத்து அமலவுற்பவியும், கடவுளின் தாயும், என்றும் கன்னியுமான மரியாள் இவ்வுலக வாழ்வுப் பயணத்தை முடித்துவிட்டு “உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள்” என்று மிகவும் சுருக்கமான வரையறையில் நான்காவது விசுவாசக் கோட்பாட்டை அதாவது மரியாளின் விண்ணேற்பை கார்த்திகை மாதம் 1ம் நாள் 1950 ஆண்டு அன்றைய பாப்பரசராக இருந்த திருத்தந்தை 12ம் பத்திநாதன் அவர்களினால் ஒரு திருமடல் மூலமாக பிரகடனம் செய்யப்பட்டது. இன்று நாம் கொண்டாடும் இவ்விழா விசுவாச உண்மையின் விழா ஆகும். இந்த விசுவாச உண்மையை மீண்டும் 2ம் வத்திக்கான் சங்கம் தம்முடைய ஒரு மடலிலே இவ்வாறு கூறுகின்றது. ஏற்கனவே விண்ணுலகில் ஆன்மாவோடும், உடலோடும் மாட்சிமைப் படுத்தப்பட்டிருக்கும் இயேசுவின் தாய், இவ்வுலகில் ஆண்டவரின் நாள் வரும்வரை பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான எதிர் நோக்குக்கும், ஆறுதலுக்கும் அடையாளமாகத் திகழ்கின்றாள் என்று குறிப்பிடுகின்றது.

இந்த நாளிலே நாங்கள் பதிலுரைப் பாடலிலே பாடினோம். சங்கீத ஆசிரியரோடு சேர்ந்து ‘‘ஓபீரின் பொன் அணிந்து வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்தரசி.’’ என்று, ஓபீர் என்பது தங்க நகைகளுக்குப் பேர்போன ஓர் பிராந்தியம்.

இந்த பிராந்தியத்தில் இருக்கின்ற தங்க நகைகளை அணிந்த ஒரு பட்டத்தரசி வலப்புறத்திலே நிற்கின்றாள் என்று சங்கீத ஆசிரியர் சொல்லுகின்றார். இந்த பட்டத்தரசி யார் என்று ஆராய்ந்து கொண்டு போகின்றபோது இந்த வலப்புறத்திலே இருப்பவள் இறைவனின் தாயாக இருக்கவேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அங்கே அரியணையிலே வீற்றிருப்பவர் கடவுள், கடவுளின் வலப்புறத்திலே வீற்றிருப்பவர் கிறிஸ்து இதனால்தான் நம்பிக்கை அறிக்கையிலே நாங்கள் சொல்கின்றோம், விண்ணகத்துக்கெழுந்தருளி தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கிறார். என்று இவ்வாறாக வீற்றிருக்கின்ற இவருடைய வலப்புறத்திலே நிற்கின்றார் என்று, சங்கீத ஆசிரியர் சொல்கின்றார். வலப்புறத்திலே இருப்பது என்பது ஒருவருடைய கோட்பாடுகளை ஒருவருடைய விருப்பத்துக்கு அமைய வாழ்கின்ற ஒருவருக்குக் கிடைக்கின்ற பாக்கியம். இதனால் தான் சில சந்தர்பங்களில் நாங்களும் கூறுவது வழக்கம் இன்னார் இவரது வலக்கை என்று, வலது பக்கத்திலே நிற்கின்றார் என்று சொன்னால் இறைவனுடைய திட்டத்தை செயற்படுத்தி, இறைவனுக்கு என்றுமே ஏற்புடையவளாக வாழ்ந்ததன் காரணத்தால் அந்தப் பட்டத்தரசிக்குக் கிடைத்த ஒரு பாக்கியம். அதே நேரத்திலே இந்தப் பட்டத்தரசி அந்த வலப்புறத்திலே நிற்கின்றாள் என்று சொல்லப்படுகின்றது. அரியணையிலே வீற்றிருக்கின்ற ஆண்டவருடைய வலப் பக்கத்திலே நிற்பது எதற்காக என்று சொன்னால், அந்தப் பெண் தன்னுடைய தாழ்மையை வெளிப்படுத்துகின்றாள். இதனால் தான் இந்நிகழ்வுகள் நடப்பதற்கு முன்னரே சங்கீத ஆசிரியர் ‘‘ஓபீரின் தங்க பொன்’’ அணி அணிந்து வலப்புறத்தில் நிற்கின்றாள் பட்டத்து அரசி என்று பாடி விடுகின்றார்.

இன்றைய முதலாவது வாசகமானது திருவழிபாட்டு நூலிலிருந்து எடுக்கப்பட்ட வாசகத்திலே மீண்டும் நாங்கள் காண்கின்றோம். வானில் பெரியதொரு அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாகவும், பன்னிரு விண்மீன்களை தலைமீது அணிந்து பேறுகால வேதனைப்பட்டு கடும் துயரத்துடன் நிற்கின்ற பெண்ணைக் கண்டார். என்று அந்த ஆசிரியர் தாம் கண்ட காட்சியை காட்டுகின்றார். இந்தப் பெண் யார்? என்பது தான் கேள்வி அடையாள ரீதியாக இந்தப் பெண் திருஅவையைக் காட்டி நிற்கின்றது என்று கூறப்பட்டதற்கேற்ப திருஅவை என்பது யார்? திருஅவை என்பது என்ன? திருஅவை என்பது இறைமக்கள். அவ்வாறென்று சொன்னால், திருஅவையின் முதலாவது அங்கத்தவராகிய கன்னி மரியாள் அந்தப்பெண் என்று கூறப்படுகின்றது. அன்பார்ந்தவர்களே இன்றைய முதலாவது வாசகத்திலே இவ்வாறாக வானிலே வீற்றிருக்கிற இந்தப் பெரிய காட்சிகளைக் கொண்ட இந்தப் பெண்ணுக்கும், பத்து கொம்புகளையும், ஏழு தலைகளையும் கொண்டு நெருப்பு மயமாக தோன்றியிருக்கிற ஒரு அரக்கப் பாம்புக்குமிடையே இருக்கின்ற ஒரு போராட்டத்தை இன்றைய முதலாம் வாசகத்திலே ஆசிரியர் காட்டுகின்றார். தான் கண்ட காட்சியின் வழியாக இந்த அரக்கப் பாம்பு அந்த குழந்தையை விழுங்கி விட வேண்டுமென்று, இருப்பதுதான் அரக்கப் பாம்பு. நீங்களும் நானும் இன்று வாழுகின்ற சமுதாயத்திலே இந்த அரக்கப் பாம்பின் பிடிக்குள் சிக்குண்டவர்கள் போல வாழுகின்றோம். அந்த அரக்கப் பாம்பின் ஆட்சியை கண்டு கொண்டிருக்கின்றோம். அது உலக ரீதியாக இருக்கலாம், எம்முடைய நாடாக இருக்கலாம், எம்முடைய சமுதாயமாக இருக்கலாம், எம்முடைய குடும்பமாக இருக்கலாம், நாங்கள் தொழில் செய்கின்ற நிறுவனங்களாக இருக்கலாம் அரக்கப் பாம்பின் கொடுரம், அதன் ஆட்சி நடந்து கொண்டிருக் -கின்றதையும், அதேநேரத்திலே இந்த அரக்கப் பாம்பிற்கும், நன்மையை விரும்புகின்றவர்க்குமிடையே இருக்கின்ற போராட்டத்தையும் நாங்கள் காணக் கூடியதாயிருக்கின்றது. இருந்தாலும், இன்றைய வாசகங்களிலே நாங்கள் காண்பது என்னவென்று சொன்னால், அரக்கப் பாம்பு தோற்கடிக்கின்றது. அந்தப் பெண், குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். அக் குழந்தை மனுக்குலத்தின் மீட்பராக வருகின்றார் என்று, இது எவ்வாறு அந்தப் பெண்ணுக்கு இயலுமாகியது, அப்பெண் அருள்நிறைந்தவளாக இருந்தாள், ஆண்டவர் அவரோடு இருந்தார். இதனால் அப் பெண்ணுக்கு இவை அனைத்தையும் வெற்றி கொள்ளக்கூடியதாயிருக்கின்றது.

தீமை என்பது ஆண்டவரிடமிருந்து வருகின்ற ஒன்றல்ல. மாறாக தீமை என்பது ஆண்டவர் நன்மைக்கு வழங்கிய சுதந்திரத்தின் ஒரு பிரதிபலனாக இருக்கின்றது. இருந்தாலும் ஆண்டவர் அந்த நன்மையை மீண்டும் எங்களில் நிலைநாட்ட வேண்டுமென்று சொன்னால் அவருடைய அருளோடு அந்த சுதந்திரத்தை சரியான வழியிலே பயன்படுத்துவதற்கு வேண்டிய அருளை நாங்கள் பெற்றிருக்க வேண்டும். அதற்காக செபிப்போமாக.

தாயே எங்களுக்காக மன்றாடும். எங்களுடைய குடும்பங்களுக்காக செபியும், எங்களுடைய நாட்டிற்காக செபியும், நாங்கள் அனுபவிக்கின்ற அன்றாட துன்பங்களை எங்களிடம் இருந்து அகற்றியருளும் என்று மன்றாடுவோமாக. ●

# நினைவுகூர்ந்து செபிக்கின்றோம்



**அருட்பணி. J.P. தேவராஜா அடிகளார்**

மன்னார் மறை மாவட்டத்தின் மூத்த குருவான அமரர் அருட்பணி J.P. தேவராஜா அடிகளார் இறைபதமடைந்து ஈராண்டு நிறைவு தினத்தை கடந்த 10.08.2022 அன்று நினைவு கூர்ந்து எம் அன்புத் தந்தையின் ஆன்மா இறைவனின் இன்ப சந்தியில் இளைப்பாற எமது செபங்களில் அவருக்காக வேண்டிக்கொள்கின்றோம். ●

# துயர் பகிர்கின்றோம்



**அருட்சகோதரி வி. அமலி டபரேரா.**

முத்தரிப்புத்துறையை சேர்ந்த அருட்சகோதரி வி. அமலி டபரேரா. தனது 89வது வயதில் காலமானார். இறைவனடியில் இளைப்பாறும் அருட்சகோதரி அவர்களுக்கு எமது மன்னார் மறைமாவட்டம் சார்பாக இதய அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம். ●

அருட்பணி ஸ்ரெலின் சோசை (சாந்தன்) அடிகளாருடைய தாய் **அ. மாசில்லா லெம்பேட்** அவர்களுடைய இறப்பை நினைந்து, அவருடைய ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடையவும் அவருடைய பிரிவால் துயருறுகின்ற அவருடைய குடும்பத்தினருக்கு இறைவன் ஆறுதலாக இருக்கும் படியாக நாங்கள் செபித்து நிற்கின்றோம். ●

அருட்பணி யூட் குரூஸ் அடிகளாருடைய தாய் **அதிரியான் கிறிஸ்துமேரி வாஸ்** அவர்கள் 06.08.2022 அன்று இறைபதமடைந்தார். அவருடைய ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடையவும் அவருடைய பிரிவால் துயருறுகின்ற குடும்பத்தினருக்கு இறைவன் ஆறுதலாக இருக்கும் படியாக நாங்கள் செபித்து நிற்கின்றோம். ●

# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

## புரட்டாதி 2022

05. புனித அன்னை திரேசா திருவிழா - புதிய கோயில்குளம்
08. புனித அடைக்கல அன்னை திருவிழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், பாரதிபுரம், விடத்தல்தீவு, எழுத்தூர், மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, சாளம்பன், மூங்கில்முறிச்சான், வேளாங்கண்ணிநகர், பறண்நட்டகல், நொச்சிக்குளம்.
    - புனித வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு, கங்கன்குளம், புதியகற்பகபுரம், உக்குளாங்குளம், நடுக்குடா, நெடுங்குளம், பள்ளிமுனை, கணேசபுரம்
    - புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - பூம்புகார், நடுக்குடா, கருவேப்பங்குளம்
    - புனித சதாசகாய அன்னை திருவிழா - தலைமன்னார்பியர்
    - புனித அங்காமத்து அன்னை திருவிழா - குஞ்சுக்குளம்
09. புனித வேளாங்கண்ணி திருவிழா- பாலியாறு (தேவன்பிட்டி), தோணிக்கல், எல்லப்பர் மருதன்குளம்
11. புனித வேளாங்கண்ணி திருவிழா - கட்டுக்கரைகுளம்
14. குருசுக்கோவில் திருவிழா - மன்னார்
    - திருச்சிலுவை அருட்சகோதரிகள் விழா
15. புனித வியாகுல அன்னை திருவிழா - அடம்பன், சின்னவலயன்கட்டு
    - புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - வவுனியா வைத்தியசாலை
16. புனித வேளாங்கன்னி திருவிழா - ஓமந்தை
    - புனித அடைக்கல அன்னை திருவிழா - முருகனூர்
21. புனித சதாசகாய அன்னை திருவிழா - கந்தபுரம்
    - புனித வேளாங்கன்னி திருவிழா - கருங்கண்டல்
22. புனித சிந்தாத்திரை அன்னை திருவிழா - பெரியமுறிப்பு
    - அருட்பணி. பிரான்சிஸ் குலாஸ் அடிகளாரின் நினைவு தினம் (2011)
24. புனித சிந்தாத்திரை அன்னை திருவிழா - பாப்பாமோட்டை, மடுறோட்
26. புனித சதாசகாய அன்னை திருவிழா - சகாயமாதாபுரம், சாவற்கட்டு
    - அருட்பணி. பாக்கிய றஞ்சித் அடிகளாரின் நினைவு தினம் (2007)
28. புனித வேளாங்கண்ணி அன்னை திருவிழா - தாமரைகுளம்
    - புனித அடைக்கல அன்னை திருவிழா - கருவாஞ்சிக்குளம்
29. புனித மிக்கேல் திருவிழா -தரவன்கோட்டை, தாலிக்குளம், பள்ளிமுனை
    - புனித சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்டச் செய்திகள்

## அமரர் திரு பேதுரு மனுவேல் அவர்களின் ஞாபகார்த்த புனித சூசையப்பர் முதியோர் நலன்புரிச்சங்க கட்டிடத் திறப்பு விழா



27.06.2022 மாலை 4.00 மணிக்கு வஞ்சியங்குளம் பங்கின் புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலயத்தில் பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்கும் உரிய எம் ஆயர்தந்தை பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் அமரர் திரு பேதுரு. இம்மானுவேல் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து அவர் நினைவாக குடும்பத்தாரால் அழகாக நிர்மாணிக்கப்பட்ட புதுக்கமம் புனித சூசையப்பர் முதியோர் நலன்புரிச்சங்கக் கட்டிடமானது ஆயர் தந்தை அவர்களால் ஆசிர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

அந்நிகழ்வின் ஆலோசனை வழிகாட்டியாக பங்குத்தந்தை அருட்பணி அலெக்சாண்டலர் சில்வா அடிகளாரும், முன்னாள் மன்னார் முதியோர் நலன்புரிச் சங்க இயக்குனர் அருட்பணி ஒல்பன் இராசசிங்கம், முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி ஞானாதிக்கம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த அருட்தந்தையர் -களான அருட்பணி எஸ்.அன்ரன் (வாழ்வுதய இயக்குனர்), அருட்பணி எம்.தேவராஜா (பங்குதந்தை மகாறம்பைக்குளம்), அருட்கோதரர் ஏ.கிறிஸ்ரி (இலங்கைக்கான அன்பின் சகோதர சபை (முதல்வர்) மற்றும் டிவைன் தியான இல்ல அருட்தந்தை ரஜி உயிலங்குளம் பங்குதந்தை அருட்பணி றெஜினோல்ட் நியூட்டன் ஆகியோரும் மன்னார் மறைமாவட்ட முதியோர்சங்க நிர்வாக உத்தியோகஸ்தர்கள், வஞ்சியங் -குளம் பங்கின் முதியோர்சங்க நிர்வாக உறுப்பினர்கள், புதுக்கமம் கிராமமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்ததுடன் குடும்பத்தவரால் வருகைதந்த அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. ●

## உயிலங்குளம் பங்கின் முதல்நன்மை கொண்டாட்டம்



உயிலங்குளம் பங்கின் புனித இராயப்பர் ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி நியூட்டன் அடிகளாரின் ஏற்பாட்டில் கடந்த 31.07.2022 அன்று காலை 07.15 மணிக்கு டிவைன் மெர்சி தியான இல்ல இயக்குனர் அருட்பணி சேவியர் அடிகளாரினால் 21 மாணவ மாணவிகளுக்கு முதல்நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இத் திருப்பலியில் அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். ●

## பெரிய பண்டிவிரிச்சான் ஆலய திருவிழாத் திருப்பலி

பெரிய பண்டிவிரிச்சான் புனித மரியகொறற்றி ஆலய திருவிழாவானது 15.07.2022 அன்று காலை 07.30 மணியளவில் திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலியினை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்குரிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ●

## இளமருதங்குளம் புனித கார்மேல் அன்னை ஆலய திருவிழா மற்றும் அபிஷேக விழா





கடந்த 16.07.2022 அன்று காலை 07.30 மணியளவில் இளமருதங்குளம் புனித கார்மேல் அன்னை ஆலய திருவிழா மற்றும் அபிஷேக விழா ஆரம்பமாகி திருப்பலியும் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ஆலய அர்ச்சிப்போடு ஆலயம் திறப்புவிழா செய்யப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு இம்மனுவேல் பெர்ணாண்டோ ஆண்டகையினால் தலைமைதாங்கி நிறைவேற்றப்பட்டது.

திருப்பலியை தொடர்ந்து ஆண்டகை ஆயர் தந்தை அவர்களையும் மற்றும் அருட்தந்தையர்கள், மற்றும் ஆலய கட்டுமானத்திற்கு உதவி புரிந்தவர்கள் அனைவரையும் பாராட்டும் நிகழ்வும் நடைபெற்றது. ●

## பெரியமடு கிறிஸ்து அரசர் ஆலய அர்ச்சிப்பு மற்றும் திறப்பு விழா



30.07.2022 மாலை 05.15 மணியளவில் ஆரம்பமாகி திருப்பலியும் கூட்டுத்திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ஆலய அர்ச்சிப்போடு ஆலயம் திறப்புவிழா செய்யப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகையின் தலைமையில் நிறைவேற்றப்பட்டது.

திருப்பலியினை தொடர்ந்து கலைநிகழ்வும், ஆண்டகை ஆயர் தந்தை அவர்களையும், அருட்தந்தையர்கள் மற்றும் ஆலய கட்டுமானத்திற்கு உதவி புரிந்தவர்கள் அனைவரையும் பாராட்டும் நிகழ்வும் நடைபெற்றது. ●

## புனித அமலோற்பவ மாதா சபை அருட்சகோதரிகளின் நிரந்தர, தற்காலிக வார்த்தைப்பாடு



கடந்த 12.07.2022 அன்று சாந்திபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் மதரை புனித அமலோற்பவ மாதா சபை அருட்சகோதரிகளின் நிரந்தர, தற்காலிக வார்த்தைப்பாட்டு நிகழ்வு நடைபெற்றது. திருப்பலியில் அருட்சகோதரி மரிஸ்ரெலா (தோட்டவெளி) அவர்கள் தங்களின் நிரந்தர வார்த்தைப்பாட்டையும், நவதுறவு பயிற்சியினை நிறைவுசெய்த லிப்ஸ்ரிக்கா (மடுக்கரை) அவர்கள் தங்களின் தற்காலிக வார்த்தைப்பாட்டையும் கொடுக்க சபை அதிபர் அருட்கசோதரி அந்தோணி புஸ்பரஞ்சிதம் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இந்நிகழ்வில் குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளாரும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர்.

## MPL கால்பந்தாட்ட போட்டி



மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட போட்டியில் மறைசாட்சியர் அணி தண்ட உதையில் அதிக கோல்களை பெற்று வெற்றி பெற்று 1000000 ரூபா பணப்பரிசு மற்றும் வெற்றி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. ●

## நல்லாயன் சபை அருட்சகோதரியின் நித்திய அர்ப்பணம்



பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கின் ஒன்பதாவது அருட் சகோதரியாக நல்லாயன் சபையில் இணைந்து தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் அதாவது நித்திய வாக்குத்தத்தம் செய்து கொண்ட பேசாலையைச் சேர்ந்த திரு திருமதி தார்சீஸ் குலாஸ் தம்பதியினரின் புதல்வி அருட்சகோதரி பிறேமி குலாஸ் அவர்களை பேசாலை சமூகம் ஆவணி 3 மாலை மாபெரும் வரவேற்பு நிகழ்வை மேற்கொண்டதுடன் அருட்சகோதரியை பேசாலையில் இருந்து இறைவன் இறை பணிக்காக அழைத்தமைக்காக கூட்டுத்திருப்பலியில் பேசாலை பங்கு சமூகம் ஒன்றிணைந்து நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தது. ●

## சிறுநீலாசனை புனித யாகப்பர் ஆலய திருவிழா



சிறுநீலாசனை புனித யாகப்பர் ஆலய திருவிழாவானது 25.07.2022 அன்று காலை 07.00 மணியளவில் திருச் செபமாலையுடன் திருவிழாத் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருப்பலியானது அருட்பணி சுரேஸ் அடிகள் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ●

1ம் பக்கத் தொடர்ச்சி

### தோட்டவெளி வேதசாட்சிகளின்...

மன்னார் திருஅவை வேதசாட்சிகளின் இரத்தத்தினால் நனைக்கப்பட்டு இறைமக்கள் உருவாக்கம் பெற்ற பிரசித்தி பெற்ற மண். இலங்கையிலே மன்னார் மாவட்டம் மட்டுமே எல்லா மாவட்டங்களிலும் அதிகூடிய கத்தோலிக்க இறைமக்களைக் கொண்ட மாவட்டம். அதிகளவான நம்பிக்கையாளர்களைக் கொண்டு வாழ்வதற்குக் காரணம் வேதசாட்சிகள் தம்முடைய இன்னுயிரை கிறிஸ்துவுக்காக ஈந்த வீர மண் இந்த மறைமாவட்டம். இவ்வேதசாட்சிகளை புனித நிலைக்கு உயர்த்த வேண்டுமென மறைமாவட்ட ரீதியாக பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மன்னார் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஆண்டுவிழா வேதசாட்சிகள் மண்ணிலே கொண்டாடப்படுகின்றது. வேதசாட்சிகள் மரித்து தம்முடைய இன்னுயிரை ஈந்த ஒரு பெருவிழாவாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது. ஆகவே தொடக்க காலத்திலிருந்து அயல் கிராமங்களின் இறைமக்கள் ஒன்றுசேர்ந்து வந்து இந்த விழாவை கொண்டாடி வந்தது மரபு. வேதசாட்சிகளுடைய வாழ்வுமுறையும், தியாகமும் உலகமறிய செய்வதற்கு இந்த திருவிழா நாட்களிலே மறைமாவட்டத்திலே வாழுகின்ற அனைத்து இறைமக்களும் இத்திருவிழாவை வேதசாட்சிகளின் இராக்கினி விழாவாக எடுத்து ஒன்றிணைந்து கொண்டாடுவது சாலப் பொருத்தமானது. துரதிஷ்டவசமாக இந்த திருவிழா நாட்களிலே பங்கைச் சேர்ந்த மக்கள் மாத்திரமே கலந்து கொள்வது இப்பொழுது நடைபெற்று வருகிறது. எவ்வாறு ஏனைய திருத்தலங்களில் விழாக்கள் முன்னெடுக்கப் படுகிறதோ அதேபோல வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலய திருவிழா சிறப்பான விழாவாக இனிவரும் காலங்களிலே கொண்டாடப்பட வேண்டியது இன்றைய திருஅவைக்கு அவசியமாயிருக்கிறது. ஆகவே வேதசாட்சிகளுடைய புனித நிலைக்கு உயர்த்துகின்ற இந்த மறைமாவட்ட முயற்சியிலே அனைவரும் இணைந்து வேதசாட்சிகளின் இராக்கினியிடம் செபித்துக்கொள்வோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பக்கம்

## 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்புப் பயணத்திலே “ஒரு கூட்... முழுத் திருஅவைக்கும் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விடுத்துள்ள அ... மற்றும் இறைமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள் கருத்துக்... வத்திக்கான் ஆயர்கள் மாமன்ற செயலகத்திற்கும் அனுப்பி ...

அருட்பணி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ,
செயலர் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் செயற்குழு,
ஆயர்கள் மாமன்றத்திற்கான மறைமாவட்ட தொடர்பாட்டாளர்.

**முன்னுரை**

மூன்றாவது ஆயிரமாண்டிலே கூட்டொருங்கியக்கப் பாதையே திருஅவையில் கடவுளின் விருப்பமாகவும் எதிர்பார்ப்பாகவும் இருப்பதால், இந்த கூட்டொருங்கியக்கத் திருஅவைப் பயணத்தை தேர்ந்துதெளிந்து தலத்திருஅவை இறைமக்களுக்கு செவிமடுக்கவும், உரையாடல்கள் வழியாக இறைமக்கள் தலத்திருஅவைக்கு தங்களை வெளிப்படுத்தவும், இறைமக்களின் பல்வேறுபட்ட கலாசார சூழ்நிலை வாழ்க்கைநிலை வளங்கள் அவர்களுக்குள்ள தடைகள் அவர்களின் ஒன்றிணைந்த பயணத்தின் மட்டிலே அனுபவிக்கின்ற சவால்கள் கசப்பான அனுபவங்கள் ஆலோசனைகள் கருத்துக்கள் போன்றவற்றை மறைமாவட்டத் தலத்திருஅவைக்கு வெளிக்கொணரவும், இதிலிருந்து காலத்தின் அடையாளமாக இறைவன் எமது பங்குச் சமூகங்களுக்கும் மறைமாவட்டத்திற்கும் உலகத் திருஅவைக்கும் எதைக்கூற விரும்புகின்றார் என்பதை தேர்ந்துதெளியவும், இத்தகைய நல்விருப்புடன் எமது மறைமாவட்ட இறைமக்களுக்கும் குருக்கள் துறவிகளுக்கும் நாம் வழங்கிய கேள்விக்கொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற அனைத்துக் கருத்துக்கள் மற்றும் அனுபவப் பகிர்வுகளின் பலனாகவும், மற்றும் எமது மறைமாவட்டத்தின் 2022ஆம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் ஆலோசனைகள் போன்றவற்றின் பெறுபேறாகவும், இறைமக்கள் திருஅவையின் ஒருங்கியக்கத்தன்மை மற்றும் அதன் இயல்பு மட்டிலே மீண்டும் தமது வேர்களுக்குத் திரும்ப வேண்டும் என்ற நோக்குடன் எமது மறைமாவட்டத்தால் எடுக்கப்படுகின்ற சகல முயற்சிகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுப்புக்களையும் மையப்படுத்தி, 2023ஆம் ஆண்டு வத்திக்கானில் இடம்பெறப் போகின்ற 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திலே எமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வெளிப்படுத்த இந்த மறைமாவட்டத் தொகுப்பானது தயாரிக்கப்பட்டு மறைமாவட்ட மேய்ப்புப்பணி திட்டமிடல் செயற்குழுவின் ஒப்புதலுடன் இலங்கை ஆயர்கள் மன்றத்திற்கும் வத்திக்கான் ஆயர்கள் மாமன்ற செயலகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2. கூட்டொருங்கியக்கப் பாதையின் தயாரிப்புப் பயணத்தின் மட்டிலே இதுவரை மறைமாவட்டமாக நாம் மேற்கொண்டுள்ள முதல்நிலைத் ஆயத்தங்கள்**




‘‘ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி’’ என்ற கருப்பொருளிலே 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்பானது ஆயத்த தொடக்க ஆன்மீக நிகழ்வுடனும் சிறப்புரையுடனும் ஒவ்வொரு தல ஆயர் தலைமையில் மறைமாவட்டத் தலத்திருஅவைகளில் 2021ஆம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதியிலே அதிகாரப்பூர்வமாகத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டதற்கு ஏற்ப எமது மறைமாவட்டத்திலும் ஆயர் தலைமையிலே 81 மறைமாவட்டக் குருக்களின் பங்கேற்றலுடன் ஆயர் இல்லத்திலே இத்தொடக்க நிகழ்வு இடம்பெற்றது. இதிலே குருக்களுக்கான கேள்விக்கொத்துக்கள் வழங்கப்பட்டு அவற்றை எப்படி இறைமக்களுக்கு அறிவுறுத்துவது என்ற விளக்கமும் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்விலே எமது மறைமாவட்டத்தால் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்பு தயாரிப்பு ஆவணம் ஒரு புத்தகமாக அனைவரின் பாவனைக்காகவும் ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு ஆயரும் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குமுன் மறைமாவட்ட பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்பதன் பிரகாரம் அருட்பணி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அவர்கள் இலங்கை ஆயர்கள் பேரவையோடு இணைந்து மறைமாவட்ட பிரதிநிதியாக செயற்படுவதற்காக ஆயர் அவர்களால் தெரிவு செய்யப்பட்டார். மேலும் இதற்கான தயாரிப்பைக் குறித்து துறவிகளுக்கான சிறப்புக் கருத்தமர்வுகள் மறைக்கோட்டங்கள் ரீதியாக நடாத்தப்பட்டது. இதிலே மொத்தமாக 118 இருபால் துறவியர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களுக்கான கேள்விக்கொத்துக்கள் வழங்கப்பட்டு குறித்த காலத்தில் அவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் எமது மறைமாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அவர்களின் துறவற சபைகளின் ஊடாக பெறப்பட்டன.

மேலும் கேள்விக்கொத்துக்கள் எமது மறைமாவட்டத்திலே பங்குத்தந்தையரின் வழிகாட்டலின் கீழ் பங்குப் பேரவையின் ஒத்துழைப்புடன் மறைமாவட்ட செயற்குழுவின் உதவியைக் கொண்டு ஒவ்வொரு பங்கிலும் மற்றும் ஆணைக்குழுக்களின் இயக்குனர்களின் தலைமையில் ஒவ்வொரு ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டது. பங்குத்தளங்களிலே கவனிக்கப்படாமலும் மனக்காயங்களோடும் ஓரங்கட்டப்பட்ட நிலையிலும் அல்லது பங்குச் செயற்பாடுகளில் அக்கறையற்ற நிலையிலும் இருக்கின்ற இறைமக்களை அடையாளம் கண்டு மீண்டும் பங்குத் திருஅவையிலே அவர்கள் இணைந்துகொள்ள வழித்துணையாக ஏறத்தாழ 5000ற்கும் அதிகமான இச்சிறப்புக் கேள்விக் கொத்துக்களுக்கான பதில்களும் ஆலோசனைகளும் எமது மறைமாவட்டத்திலுள்ள 49 பங்குகளிலிருந்தும் கிடைக்கப்பெற்று, அவை மறைமாவட்டத்திலே பல்வேறு நிலைகளிலே பாண்டித்தியம் பெற்று சிறப்பு வாய்ந்த 30 பேர்கள் அடங்கிய குழுவால் தொகுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த வருடம் 2022 மாசி மாதம் இடம்பெற்ற மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாட்டிலே, மறைமாவட்டக் குருக்கள் மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவிகள், ஆணைக்குழுக்களின் துறவிகள் மற்றும் எமது மறைமாவட்ட இறைமக்கள் இவர்களின் ஆலோசனைகளின் பயனாக கிடைக்கப் பெற்ற கருத்துக்களின் தொகுப்புக்கள் இந்தத் திட்டமிடல் மாநாட்டிலே 10 தலைப்புக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டு இதில் பங்கேற்ற 210 பங்கேற்பாளர்களின் குழு ஆய்விற்கு முன்வைக்கப்பட்டு இறுதியாக எமது மன்னார் மறைமாவட்டம் எமது குருக்கள் துறவிகள் இறைமக்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் முன்மொழிவுகள் மனப்பதிவுகள் எதிர்வினை உணர்வுகள் அனைத்தையும் உள்ளடக்கிய 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தொகுப்பானது ‘‘ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான’’ அழைப்பின் மட்டிலே இவ்வடிவம் பெற்றது.

**3. ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான மறைமாவட்ட தயாரிப்புப் பயணத்திலே முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து தேர்ந்துதெளிதலின் பலனாக கிடைக்கப் பெற்ற கனிகள்**

**3.1 ஒன்றிப்பு**

நமது பிரிவினைகளும், முரண்பாடான கருத்துக்களும் எண்ணங்களும், போட்டிகளும், நம்மை இன்னும் இன்னும் பின்னோக்கிக் கொண்டுபோக முடியாது. உடன் இணைந்த பயணத்திலே ஒன்றித்த தோழமையிலே இயேசுவின் இதயம் கொண்டு வாழ்வதும், அவரின் பாதையிலே வழிநடப்பதும், வழிநடாத்துவதும் அனைத்து நம்பிக்கையாளர்களுக்குமே உரிய கடமையாக உணரப்பட்டுள்ளது. பங்கிலே ஒருத்தர் பிரிந்து இருக்கின்றார் என்றால் பிரிந்து ,ருப்பதற்கான காரணங்களை முதலில் இனங்காணல் வேண்டும். பிரச்சினைக்குரியவர்களுடன் நேரிய முறையில் உரையாடக் கூடியவரை இனங்கண்டு பங்குத்தந்தை நேரடியாக வீடுகளிற்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டல் வேண்டும். பொறுமையுள்ள ஒரு நபரை பிரச்சினைகளை செவிமடுப்பவராக நியமித்தல் வேண்டும். பங்கின் பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களையும் செவிமடுத்து பொதுவான தீர்மானம் எடுத்தல் வேண்டும். முற்சார்பு மனப்பதிவைத் தவிர்த்தல் வேண்டும். கிறிஸ்துவின் பெயரால் உருவாக்கம் கொண்ட முதிர்ச்சி தொடர் பயிற்சியாக சிறுவர்களுக்கு மறைக்கல்வி வகுப்புக்களிலும், வீடுகளிலும், ஆலயங்களிலும் வழங்கப்படல் வேண்டும். பகைமையை மறந்து, ஏற்றுக்கொள்ளும் தன்மை அதிகரிக்க வேண்டும். பொதுநன்மைக்காக சுயநலம் களைந்து விட்டுக்கொடுக்கும் தன்மை நம்மில் அதிகரிக்க வேண்டும். பாரபட்சம் காட்டும் தளங்களாக நமது ஆலயங்களோ, பாடசாலைகளோ, பணித்தளங்களோ, பொது பணிகளோ மாறிவிடக்கூடாது. பங்கிலுள்ள அனைவரும் தங்களை சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய நிலை பங்குத்தந்தை மட்டிலும் ஆலய நிர்வாகம் மட்டிலும் இருத்தல் வேண்டும்.

**3.2 ஒன்றிப்பில் செவிமெடுத்தல் மற்றும் உரையாடுதலின் இன்றியமையாமை**

பங்குத்தந்தை மற்றும் துறவிகள் அவர்களின் பணிப்பொறுப்பில் உள்ளவர்கள் அனைவருக்கும் செவிமடுக்க வேண்டும். செவிமடுத்தலில் விருப்பம், அர்ப்பணம், தொடர்ச்சியான உருவாக்கப் பயிற்சி இன்றியமையாததாகும். ஆறுதலான வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்ற போது அது செவிமெடுத்தலை வளர்க்கிறது. திறந்த மனதோடு உரையாடுதலும் உரையாட நேரம் ஒதுக்குதலும் தேடிச்சென்று விளிம்பில் உள்ளோர் பிரச்சினைகளை அறிந்து கொள்ளுதலும் கடின இதயம் கொண்ட மனநிலை தவிர்த்தலும் இன மதங்களைக் கடந்த சமூக உரையாடல்களை முன்னெடுத்தலும் பொறுமையோடு செவிமடுத்தலும் மற்றவருடைய கருத்துகளுக்கு மதிப்பளித்தலும் உரையாடுதலின் இன்றியமையாகும். திருஅவையின் மத்தியில் நம்பகத்தன்மையை உரையாடல் மூலம் ஏற்படுத்த வேண்டும். அனைத்து உரையாடல்களிலும் திருநிலையினர்கள் பொது நோக்குடன் ஈடுபட வேண்டும். சமூக ரீதியான விடயங்களில் திருநிலையினர்கள் கூடுதலாக ஈடுபடுவதன் மூலம் இதனை செய்ய முடியும். சமூகத்திலுள்ள சாதி, சமூக வேறுபாடுகள் போன்றவற்றை கடந்து பொது நோக்கத்திற்காக உரையாடல்களை மேற்கொள்ளுதல் அவசியமாகும். ஆரோக்கியமான சமூக உறவையும் ஒருங்கியக்கத்தையும் சமய விழுமியங்களை பேணுவதற்கும் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் சரியான பொருத்தமான அரசியல் பிரதிநிதியை தெரிவு செய்வதற்கும் மக்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்வதற்கும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் ஆரோக்கியமான உரையாடல் அவசியமாகும். பரஸ்பர உரையாடலும், செவிமடுத்தலும், தேர்ந்துதெளிதலுமே பங்குகளில் ஏற்படுகின்ற பிரிவினைகளை மற்றும் சிக்கல்களை தீர்ப்பதற்கான வழிகளாகும்.

**3.3 பிரிந்திருப்பவர்களை இணைக்கும் வழிகள்**

குடும்பங்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிலையம் உருவாக்குதலும் திருமணத்தின் பின் தொடர் வலுவூட்டல் கருத்தமர்வுகள் நடாத்தப்பட வேண்டும். பிரச்சினைகள் உள்ள குடும்பங்களை ஆலயசபை ஊடாக இனங்கண்டு தரவு சேகரித்து சிறப்பு தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு சட்ட ஆலொசனை குரு, குடும்ப ஆலோசகர், மருத்துவர், உளவியல் நிபுணர் அணுகுதல் வேண்டும். அருட்பணியாளர்கள், துறவிகள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள் மற்றும் ஆற்றுப்படுத்தும் குழுக்கள் வீடுகளை சந்தித்தல் உரையாடுதல் மூலம் நம்பிக்கையூட்டி பொறுப்புக்களை வழங்குதல் வேண்டும். மனதால் காயப்பட்டவர்கள் அல்லது தாங்கள் செய்தது தவறு என்று பிரிந்து இருந்து தங்களை நியாயப்படுத்துபவர்களுக்கு பங்குத்தந்தை, துறவிகள், ஆலய நிர்வாகம், செவிமெடுக்க வேண்டும். ஆற்றுப்படுத்த வேண்டியவர்களின் இல்லங்களை பங்குச்சமூகம் அடிக்கடி சந்தித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந கூட்டொருங்கியக்கத் திருஅவையாக ஒன்றிணைந்து பங்கேற்று பணியாற்ற" ள அழைப்பின் மட்டிலே மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் குருக்கள் துறவிகள் த்துக் கணிப்புக்களிலிருந்து இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கும் ப்பி வைக்கப்பட்டுள்ள மறைமாவட்டத் தொகுப்பின் சாராம்சம்

அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அன்பிய இல்ல திருப்பலி வழிபாடுகள் மற்றும் இறைவார்த்தை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஆலயத்திற்குள் கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

**3.4 பொதுநிலையினர்கள் திருநிலையினரோடு கொண்டிருக்க வேண்டிய ஒன்றிப்பு**

பொதுநிலையினர்கள் தவறாமல் ஞாயிறு திருப்பலியில் பங்கெடுத்தல் வேண்டும். குருக்களை சரியான முறையில் பராமரிக்கவும், பங்குத் திருஅவையின் செயற்பாடுகளில் அர்ப்பணத்துடன் ஈடுபடவும், உண்மைத் தன்மை உடையவர்களாகவும், பங்கில் பிரச்சினைகள் எழும்போது பங்குத்தந்தையிடம் அதனை உடன் தெரியப்படுத்துபவர்களாகவும், பங்கில் பங்குத்தந்தை பணியின் நிமித்தம் ஒருசிலரிடமோ அல்லது குழுக்களிடமோ ஆலோசிக்கும் போது பங்குத்தந்தையினரை பற்றி தவறான கண்ணோட்டத்தை களைபவர்களாகவும், பிரிந்து நிற்பவரை உள்வாங்கும் போது முதலில் இணைந்து பணியாற்றியவர்கள் அவர்களை பணிக்குள் உள்வாங்க தயங்குகின்ற மனநிலையில் மாற்றமும் இதற்குகந்த ஆளமையில் முதிர்ச்சி பெற்றவர்களாகவும், பங்குத்தந்தையினர்களின் தனித்துவத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும், பங்குமட்டத்தில் குடும்பங்களுக்கிடையில் பல நிலைகளிலே வேறுபாடுகள் காணப்படுகின்ற போது பங்குத்தந்தை பணியின் நிமிர்த்தம் குடும்பங்களை அணுகும் போது அதனை புரிந்துகொள்ளும் மனநிலையும் அதை மேய்ப்புபணி பார்வையில் உற்றுநோக்கும் முதிர்ச்சியும் பொதுநிலையினரிடம் மேன்மேலும் உருவாக வேண்டும். பொதுநிலையினர் வெளிப்படைத் தன்மையுடையவர்களாக திருநிலையினர் மட்டில் உள்ள முற்சார்பு எண்ணங்களை தவிர்த்து தங்களின் தவறுகளை நியாயப்படுத்தாமல் ஏற்றுக்கொண்டு ஒன்றுசேர்ந்து பணியாற்ற முன்வரல் வேண்டும்.

**3.5 திருநிலையினர்கள் பொதுநிலையினர்களோடு கொண்டிருக்க வேண்டிய ஒன்றிப்பு**

எல்லோருடைய கருத்துக்களையும் உள்வாங்கி, சீர்தூக்கிப் பார்த்து, நடைமுறைப்படுத்துகின்ற திறந்த மனப்பாங்கு திருநிலையினருக்கு (ஆயர், குருக்கள், துறவிகள்) இருக்க வேண்டும். பொறுப்பில் உள்ளவர்கள் மக்களின் எண்ணங்களை புரிந்து கொள்ளும் வகையில் நெகிழும் தன்மை உடையவர்களாக இருக்க வேண்டும். துறவிகள் மற்றும் பங்கு பணியாளர்கள் தங்களது உருவாக்க காலங்களில் பெற்ற பயிற்சிகளை பணித்தளங்களில் செயல்படுத்த வேண்டும். பொதுநிலையினர்களின் பணிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களை இன்னுமதிகமாய் உள்வாங்கக் கூடிய தாராள மனம் திருநிலையினருக்கு மத்தியில் அதிகரிக்க வேண்டும். திருநிலையினரிலே செபவாழ்வு அதிகரிக்க வேண்டும். அவர்கள் நேரமொதுக்கி மக்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்கவும் ஆடம்பரமற்ற எளிய வாழ்வு முறையும் பக்கச் சார்பற்ற தன்மையும் கொண்டிருத்தல் வேண்டும். திருநிலையினர்கள் வெறுமனே சம்பிரதாயவாதிகளாகவோ அல்லது சடங்குகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவோ அல்லது வெறும் தலைசிறந்த நிர்வாகிகளாகவோ இல்லாமல் இறைமக்கள் மட்டிலே அன்போடும் பரிவோடும் இரக்கத்தோடும் நடந்துகொண்டு ஆன்மாக்களை மீட்கும் செயல்களில் தங்களைத் தாழ்த்தி விட்டுக்கொடுத்து பணியாற்றுவதே காலத்தின் தேவையென உணரப்பட்டுள்ளது. அவர்கள் வழிபாடுகளை சிறப்பாக மறையுரைகளை இறைவார்த்தையின் ஒழுங்கில் ஆயத்தம் செய்தல்வேண்டும். எல்லோரையும் சமமாக மதித்து தங்களோடு முரண்படுகின்றவர்களுடன் கூட பழிவாங்கும் மனநிலையற்றவர்களாக பணித்தளங்களில் இருக்கவேண்டும். பங்குத்தந்தையர்கள் ஞானத்தோடும் முதிர்ச்சியோடும் இறைவார்த்தை அடிப்படையிலே திருச்சபையின் பாரம்பரியங்களை பின்பற்றி தீர்மானங்கள் எடுப்பதையே பொதுநிலையினர் விரும்பி நிற்கிறார்கள். பங்கின் பிரச்சினைகளின் சமூக வரலாற்று காரணங்கள் பின்னணிகளை அறிந்தவர்களாகவும் விளிம்பு நிலையில் இருப்போரை தேடிச் செல்லவும் முன்வர வேண்டும்.

**4. பணி**

நாம் ஒவ்வொருவருமே இறையரசை நமது கிறிஸ்தவ விழுமியங்களால் இவ்வுலகிலே கட்டியெழுப்பவும் அதனால் விண்ணரசை சுவீகரித்துக் கொள்ளவுமே திருமுழுக்கால் நாம் பெற்ற பொது அழைப்பாலும் இறைவன் சிலருக்கு கொடுத்துள்ள சிறப்பு திருநிலை பணிகளாலும் அழைக்கப்பட்டுள்ளோம்.

**4.1 இளையோர்**

இளையோரின் குறைகள் பங்குத்தந்தையரால் செவிமடுக்கப்பட்டு தேவைக்கேற்ப இளையோர் ஆணைக்குழுவின் உதவிகள் பெற்று, பங்குகளின் வேறுபாட்டினையும் தனித்துவத்தினையும் கருத்தில் கொண்டு இளையோர்களுக்கு அதற்கேற்ப உருவாக்கம் கொடுக்கப்பட்டு இளையோர் ஆணைக்குழு வேலை வாய்ப்பற்ற இளையோர்களின் தரவுகளை சேகரித்து உள்வாங்கப்படாத இளையோர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கிட ஒவ்வொரு இளையோர்களின் இலட்சியங்களையும் திறமைகளையும் இனங்கண்டு அவர்களை வழிப்படுத்தல் வேண்டும். பங்கில் எல்லா கத்தோலிக்க இளையோரையும் உள்வாங்க பங்கில் பணியாற்றும் துறவிகள் பொதுநிலைப் பணியாளர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம். பங்குப்பணிகளில் பொறுப்புக்களில் அதிக இளையோர்களை உள்வாங்கவும் அவர்களுக்கான பணிக்கான எல்லைகள் உருவாக்கப்படல் வேண்டும். பங்கின் வெளியில் நிற்கும் இளையோரை உள்வாங்க திட்டங்கள் மேற்கொள்ளல் வேண்டும். துணை மறைக்கோட்டங்களாக நிகழ்வுகளை நடாத்துதல் வேண்டும். மற்றும் பங்குகளில் துணை ஆலயங்களிலே இளையோர் ஒன்றியங்களை உருவாக்க ஆற்றுப்படுத்த வேண்டும்.

**4.2 குடும்பங்கள்**

பங்குகளின் அடிப்படையில் திருமணமானவர்களுக்கு கருத்தமர்வு மற்றும் புதுப்பித்தல் நிகழ்வுகளை நடாத்துதல் வேண்டும். குடும்ப ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் மறைமாவட்டத்தில் மட்டுமன்றி பங்குமட்டத்தில் விரிவாக்கப்பட வேண்டும். குடி போதைவஸ்து தற்கால சவாலாக இருப்பதனால் குடும்பநல ஆணைக்குழு அதற்கான சிறப்பு திட்டங்களை அதற்குரிய வளவாளர்கள் மூலம் செயற்படுத்த வேண்டும். குடும்பச் செபம் குடும்பங்களில் இன்றியமையாதது என்பது எவ்வகையேனும் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட வேண்டும். குடும்பங்களை பங்குத்தந்தையர்கள், துறவிகள், பங்குநிலைப் பணியாளர்கள் அடிக்கடி சந்திக்க வேண்டும். ''கிறிஸ்துவிற்காக குடும்பங்கள்'' சில பங்குகளில் உருவாக்கப்பட்டு இயங்கினாலும் அவை இன்னும் பல பங்குகளில் உருவாக்குதல் நன்மை பயக்கும். பங்கில் குடும்ப குழுக்களை உருவாக்கல் வேண்டும். எமது மறைமாவட்டத்திற்கென ஒரு ஆற்றுப்படுத்தல் உளவள மையம் காலத்தின் தேவையாக இருப்பது பலராலும் முன்வைக்கப்பட்ட கருத்தாக உணரப்பட்டு உள்ளது.

**4.3 சிறுவர்கள்**

இன்றைய காலகட்டத்திலே சிறுவர்களைக் குறித்த உருவாக்கம் மிகவும் அத்தியாவசியமானதாகும். சீரழிந்த இந்த நவீன உலகத்திலே சிறுவர்கள் பாதிக்கப்படுவதால் எமது எதிர்கால சந்ததியினரின் இறைவாழ்வு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் மறைக்கல்வி வகுப்புக்களுக்கு ஆர்வமுடன் செல்லவும், முதல்நன்மை மற்றும் உறுதிப்பூசுதல் அருட்சாதனங்களுக்கான ஆயத்தங்களில் முற்றுமுழுதாக பங்கெடுக்க பெற்றோர்கள் அவர்களை ஊக்கப்படுத்தியும் இதன்மட்டிலே சிறப்புக் கவனமும் செலுத்த வேண்டும். மறைமாவட்ட ரீதியாக சிறுவர்களின் ஆன்மீக வாழ்வு மட்டிலே இடைவிடாத தொடர் பயிற்சிக்கான நிகழ்வுகள் இடம்பெற வேண்டும்.

**5. பங்கேற்றல்**

பங்குகளில் காணப்படும் பணிகளை இனங்காணுதல் வேண்டும். அதிகாரப் போக்குகளை தவிர்த்து பொறுப்புக்களை பகிர்ந்து வழங்க வேண்டும். வழமையாக எப்போதுமே ஆலய நிர்வாகத்திலும், ஏனைய காரியங்களிலும் முன்னிலைப்படுத்தப் படுகின்றவர்களை குறைத்து இளையோர்களையும் உள்வாங்க வேண்டும். சில இடங்களில் ஒருசிலர் மாத்திரமே சுருபக்கூடு தூக்குதல், கவி பாடுதல், பொறுப்புக்களை ஏற்றல், நவநாள் வழிபாடுகளில் பங்குபற்றுதல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். ''மறைமாவட்டத்திற்கான அடிப்படை சட்டக்கோவை'' தயாரிக்கப்பட்டு இறைமக்களின் பயன்பாட்டிற்காக கொடுக்கப்பட வேண்டியது உடன் இணைந்து பயணித்தலிலே இன்றைய காலத்தின் அடிப்படைத் தேவையாக உணரப்பட்டுள்ளது.

**5.1 அன்பியம்**

திருஅவையின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அன்பியங்கள் சிறந்த வழிமுறையாகும். அன்பியங்களின் உதவியோடு பிரச்சினைக்குரிய நபர்களையும் பிரச்சினைகளையும் இனம்காணல் வேண்டும். கருத்தமர்வுகள், பயிற்சி பாசறைகள் இவற்றினூடாக பணிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பக்தி சபையினருக்கு செவிமடுத்தல் பயிற்சியினை வழங்குதல் வேண்டும். அன்பிய வாழ்வு பற்றிய விடயங்களை மீண்டும் பங்குகள் ரீதியில் புதுப்பித்து ஆழப்படுத்தி செயற்படுத்துதல் வேண்டும். இயேசு ஏற்படுத்திய திரு அவை எது என்பதை தேர்ந்து தெளிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு நடத்தல் அவசியம். அன்பியங்கள் வெறுமனே வழிபாடுகளாக பார்க்கப்படுகின்றன இந்நிலை மாறி அன்பியப் பணிகள் பொதுநிலையினரின் சிறப்பு பணிகளாக முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும். அன்பியங்கள் வழியாக பங்களிலே பிரிந்திருப்பவர்களை இனங்கண்டு ஒன்றுசேர்க்க முன்வர வேண்டும்.

**5.2 பல்சமய உரையாடலும் கிறிஸ்தவ ஒன்றிப்பும்**

பல்சமய உரையாடல் குறித்த சிறப்பு விழிப்புணர்வுகளையும் உரையாடல்களையும் இறைமக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் வேண்டும். பல்சமய உரையாடல்களை சிறந்த முறையில் மேற்கொண்டு கருத்து பரிமாற்றத்தில் சம வாய்ப்புக்களை வழங்குதல் இன்றியமையாததாகும். ஏனைய சமயத்தவர்களுக்கு ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை நாம் நிறுத்த வேண்டும். இவ்வாறான காரியங்களிலே சாதாரண மக்களின் உணர்வுகளை தூண்டிவிடும் வகையில் நமது சொல், செயல்களோ அமைதல் சிறந்தல்ல. பொதுவான சமூகப் பிரச்சினைகளில் (சுற்றுச்சூழல், போதைவஸ்து) அனைத்து மதத்தினரையும் ஒன்றினைத்தல் வேண்டும். ஏனைய சமயங்கள் மட்டிலே விட்டுக்கொடுப்பு மனப்பான்மையோடும் மன்னிப்பு, தாழ்ச்சி போன்ற கிறிஸ்தவ விழுமியங்கோடும் நடந்து கொள்ளுதல் வேண்டும். கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை கட்டாயம் மறைமாவட்ட ரீதியாக மறைமாவட்டம் முழுவதும் ஒன்றிணைந்து கடைப்பிடித்தல் வேண்டும். ஆதித்திருச்சபையின் பண்பான நட்பாக உறவாடும் பண்பினை நாம் இங்கே விதைத்து விருட்சமாக எதிர்கால சந்ததிக்கு வழங்க முடியும்.

**5.3 அருட்சாதன கொண்டாட்டங்கள்**

ஆன்மிக ஆயத்தங்கள் இன்னும் பங்குத் திருஅவையிலே அதிகமாக தேவையாக உள்ளன. சில அருட்சாதனங்களை வெறும் ஆடம்பரங்களாகவே பார்க்கின்ற போது அவற்றில் அவ்வாறான மனநிலையுடன் பங்குபற்றுகின்ற நிலை அதிகரித்து விட்டது. அருட்சாதனங்கள் பற்றிய போதிய விளக்கம் இறைமக்களுக்கு கொடுக்கப்படல் வேண்டும். அருட்சாதன கொண்டாட்டங்களிலே இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். ஆலய திருவிழாக்கள் மற்றும் ஏனைய முக்கிய விழாக்களில் இருக்கின்ற பங்கேற்பு ஏனைய நாட்களில் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. ஆலயம் சார்ந்த கருத்தமர்வுகளில் பணியாளர்கள் மாத்திரமே பங்குபற்றுவதை அவதானிக்க முடிகிறது. அருட்சாதனக் கொண்டாட்டங்கள் ஒன்றிப்பை வளர்ப்பதில் சொல்லளவில் மட்டுமல்லாது செயலிலும் இணைத்துக்கொள்ள வழிகாட்டல் வேண்டும். இறைவார்த்தை பணிக்காக புதிய பணியாளர்களை உள்வாங்கி அவர்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும். ஆலயக் காரியங்களில் பாரம்பரிய முறைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற வேளையில் அதனை பக்குவமான மனநிலையோடு ஏற்றுக் கொள்ளும் மனநிலையை உருவாக்க வேண்டும். வழிபாடு என்பது சமூக கொண்டாட்டம் எனும் மனநிலை மாற்றப்படல் வேண்டும். அருளடையாள கொண்டாட்டத்தில் தொடர் பயிற்சியும் கண்காணிப்பும் அவசியம். இன்னும் புதிய மொழிபெயர்ப்பு செபங்கள் பலருக்கு தெரியாது. எனவே அவற்றை அச்சிட்டு வழங்குவது இறைமக்களின் பங்களிப்பை இன்னும் அதிகரிக்கும். திருமண கொண்டாட்டங்களில் ஆடம்பரத்தை தவிர்த்தல் வேண்டும். வழிபாட்டு ஒழுங்குமுறைகளை பின்பற்றல் வேண்டும். வழிபாட்டு ஆணைக்குழுவால் வழிபாடு பற்றிய விழிப்புணர்வு கருத்தமர்வு நடாத்துதல் வேண்டும். ''ஒரு கூட்டொருங்கியக்க திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி'' என்ற கருப்பொருளிலே 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான எமது மறைமாவட்ட தயாரிப்பு பயணத்திலே முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து தேர்ந்துதெளிதலின் பயனாக கிடைக்கப்பெற்ற அருங்கனிகளை நாம் இவ்வாறாக இறைமக்களின் புரிதலுக்காக இங்கே சுருக்கமாக தருகின்றோம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத புனிதர்கள்

## புனித கன்னிமரியாள் பேராலய நேர்ந்தளிப்பு

05.08.2021



திருத்தந்தை லிபேரியுசின் காலத்தில் உரோமையிலுள்ள எஸ்கலின் மலை ஆவணி 5ம் திகதி பனியால் போர்த்தப் பட்டது. அந்நாளில் உரோமையில் குழந்தைப் பேறு இல்லாமல் வாழ்ந்த யோவான் என்பவருக்கு மரியன்னை காட்சி கொடுத்து அம்மலையில் தனக்கு ஒரு ஆலயம் எழுப்புமாறு பணித்தார். அதன்படி திருத்தந்தை லிபேரியுஸிடம் இதனைத் தெரிவித்தார்கள். அவரும் பனிமய அன்னைக்கு பேராலயம் ஒன்றை அமைத்தார்.

இன்று இவ்வாலயம் உரோமையிலுள்ள முக்கிய நான்கு பேராலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களில் பெரியதாக இருப்பதால் இப் பேராலயத்திற்கு பெரிய நாயகி என்ற பெயர் வந்தது. 1568ல் திருத்தந்தை 5ம் பத்திநாதர் இவ்விழாவை திருவழிபாட்டு நாட்காட்டியில் சேர்த்து அகில உலகமெங்கும் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

## புனித ஸ்டீபன் 10.08.2021



இவர் மாகியார் என்னும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை இவ்வினத்தவரின் தலைவராவார். தமது 10வது வயதில் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டார். தந்தையின் மறைவுக்குப் பின் ஸ்டீபன் இப்பழங்குடியினரின் தலைவரானார். கி.பி 1000 ஆவது ஆண்டில் கிறிஸ்துமஸ் பெருவிழாவன்று ஹங்கேரி நாட்டின் முதல் கிறிஸ்தவ அரசராக முடிசூட்டப்பட்டார். இவரது அரசுரிமை 40 ஆண்டுகள் நீடித்தது. அக்காலப் பகுதிக்குள் அவர் ஆற்றிய தொண்டுகள் பல. சிலைவழிபாடுகளை இல்லாதொழித்தார். புனித ஆசீர்வாதப்பர் துறவிகளுக்கு மடங்கள் கட்டிக் கொடுத்து அவர்கள் மூலம் அறியாமையை அழித்தார். பழங்குடியினர் முரடர்கள் என்ற கீழ்நிலைமாறி அவர்கள் எல்லா வழிகளிலும் முன்னேற்றம் கண்டிருந்தனர். அவர்களிடையே 2 பேராயர்கள், 8 ஆயர்கள், 5 துறவு மடங்கள் ஏற்படும் அளவுக்கு திருச்சபை வளர்ச்சி அடைந்திருந்தது.

இவரது காலத்தில் நாட்டின் மறைமாநிலம் உட்பட அனைத்து நிறுவனங்களையும் புனித கன்னிமரியிடம் ஒப்படைத்திருந்தார். இவர் ஏழைகள் மத்தியில் கொண்டிருந்த அருளாலும் அன்பாலும் அதன்மூலம் அவர் தளராது செய்த இரக்கச் செயல்களின் காரணமாக இவரது இறப்புக்குப் பின்னும் இவரது வலக்கை அழியாதிருந்தது. இதுவே ஹங்கேரி நாட்டு மக்களால் மிகப் புனிதமான பொருளாக மதிக்கப்படுகிறது.

## புனித 2ம் சிக்ஸ்துஸ் பாப்புவும், தோழர்களும்

07.08.2021



புனித சிப்ரியன் தாம் எழுதிய நூல் ஒன்றில் கி.பி 258ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ம் நாள் 2ம் சிக்ஸ்துஸ் பாப்புவும் அவரின் 4 தியாக்கோன்களும் வேதசாட்சி முடிபெற்றனர் என்றும் ஓகஸ்ட் 6ஆம் நாள் ஆண்டவரின் உருமாற்றத் திருநாளானதால் அதற்கு அடுத்த நாளில் இந்தப் புனிதர்களின் திருநாள் கொண்டாடப்படுகிறது என்றும் எழுதியிருக்கிறார். வலேரியன் என்பவர் திருச்சபைக்கு எதிராகக் கலகம் எழுப்பிய காலத்தில் பாப்பு 2ம் சிக்ஸ்துஸ், கலிஸ்துஸின் புதைகுழி வளாகத்தில் இருந்த ஓர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தார். யாரும் எதிர்பாராத முறையில் கொடுங்கோல் மன்னன் அவரை அவ்வேளையில் சிறைப்படுத்தினான். திருப்பலி நிறைவேற்றிய பின் பாப்புவும் அவரோடு சேர்ந்த 4 தியாக்கோன்களும் தலை வெட்டப்பட்டு மறைசாட்சி முடிபெற்றனர்.

## புனித லூயிஸ் 25.08.2021



''இறைவனால் அருட்பொழிவு பண்ணப்பட்டவனாகவும் மக்களின் தந்தையாகவும், அமைதியின் அரசராம் கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும் பணிபுரிவேன்.'' என்ற புனித லூயிஸ் அரசனின் கடமைகளை விசுவாச ஒளியில் மட்டுமே சீர்தூக்கிப் பார்த்தவர். நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பதையே விரும்பினார். இவரின் தாய் இவரை பக்தியில் மிகக் கவனமாக வளர்த்தார்.

இவர் இருமுறை சிலுவைப் போரைத் தொடுத்தார். விசுவாசம் நிறைந்தவராய் இருந்ததனால் சிலுவைப் போரில் பங்கேற்றார். அவரது நிர்வாகத்தில் அனைவரும் உண்மையான நீதி, நியாயம் பெற்றுக்கொள்ள அவர் வழிவகுத்தார். புனித பிரான்சிஸ் அசிசியாரைத் தம் முன்மாரிதியாக பின்பற்றினார். எளியோருக்கு இவரே உணவு பரிமாறுவாராம். கி.பி 1266இல் 2வது சிலுவைப் போரை மேற்கொண்டிருந்த போது தனது 44வது வயதில் அயல் மண்ணில் காலமானார். 27 ஆண்டுகளுக்குப் பிறகு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது.

1ம் பக்கத் தொடர்ச்சி

### புதுப்படைப்பு...

குருக்களும், துறவிகளும் வளர்த்தெடுத்த எம் இறைமக்களிடையே! கலையும், கல்வியும், விளையாட்டும், ஆன்மீகமும் கலந்த வாழ்வு முறைக்குள் புதியதாய் உருக்கொடுத்தது தான் ''புதுப்படைப்பு'' என்ற நாமத்தில் ''யேசுவிற்காய் வாழுகின்றவர்கள் நாங்கள்'' என்று பரலோகம் நோக்கிய பயணத்தை மண்ணுலகிலே ஆரம்பித்த ஒரு குழுவே அது! வாசகர்களே! இவர்களை பற்றி நீங்கள் அறியத்தான் வேண்டும். இவர்களின் வரலாறு பற்றி உங்களுக்கு சுருக்கமாக தருகின்றேன்.

எமது மறைமாவட்டத்தின் கடந்த காலம் முதல் இந்நாள் வரையிலும் எந்தப் பங்கிலும் இல்லாத ஓர் ஆன்மீக சமூகநல அக்கறையும் ஆலயப் பணிகளும், ஆன்மீகப் பணிகளும், சமூக அக்கறையும், நோயாளர் சந்திப்பும், குடிவெறிக்கு அடிமையாகி குடும்ப சீரழிவுக்குள் அகப்பட்டுக்கிடக்கும் குடும்பங்களைத் தேடிச்சென்று சந்திப்பதும், புகைத்தல், வெற்றிலை போடுதல் போன்ற பழக்கங்களுக்கு அடிமையானவர்களுக்கும் இயேசுவின் மனந்திரும்புதல் செய்திகளைச் செல்லுகின்ற இடங்களெல்லாம் சொல்லி அனைவரையும் இயேசுவிற்குள் புதுவாழ்வு பெறுவோம்.

அதுவே புதுப்படைப்பாவோம் என்றும், பாரினில் வாழுகின்ற மாந்தர் நமக்கு இன்னல்களும், துன்பங்களும், நோய்களும், மரண இழப்புக்களும் வருகின்ற போது அவர்களின் இல்லம் தேடிச்சென்று இறைவார்த்தை வழிபாடுகளும் ஆலயங்களில் நற்கருணை வழிபாடுகளை நடாத்தி இறையேசுவின் விடுதலையின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வதற்கு நோயாளர் வழிபாடுகளையும் நடாத்தி வருகின்றோம். அத்தோடு வறுமையில் வாடுகின்ற ஏழைகள் சத்திர சிகிச்சைக்காக நிதி உதவிகோரி வந்தவர்கள், புற்று நோய்களுக்கு உள்ளானவர்கள் எம்மை நாடி வருகின்ற போது அவர்களுக்கு முடிந்த உதவிகளையும் செய்து வருகின்றோம். புதுப்படைப்பு என்ற பெயர்! புதுவாழ்வு பயணம்! அதுவே பரலோகம் நோக்கிய பயணம் இக்குழுவானது 2004-05-20 திகதி பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி. நோபட் அடிகளாரின் காலத்தில் எமது கிராமத்தில் அதிக ஆண்களின் மத்தியில் மது போதைக்கும் புகைத்தல் பழக்கத்திற்கும் அடிமையாகிய காலமது. அவ்வேளையில் அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளாரின் துணையுடனும் திருச்சிலுவை கன்னியர்மட அருட்சகோதரி இம்மானுவல் அவர்களின் வழிகாட்டுதலுடன் எமது பங்கில் காணப்படுகின்ற அதிக குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களையும் மதுபானம் விற்பனை செய்பவர்களையும், குடியால் குடும்பமே நிம்மதியற்றவர்களின் மத்தியில் ஒரு சில இளைஞர்களோடு அருட்சகோதரியின் வழிகாட்டுதலுடன் அடிமையானவர்களின் வீடுகளுக்குச் சென்று குடிப்பழக்கத்தால் ஏற்படுகின்ற தீமைகள் பற்றியும் இதனால் எமது கிறிஸ்துவோடு சங்கமிக்கின்ற ஆன்மா அழிந்து போகின்ற தன்மை பற்றி அவர்களோடு கலந்துரையாடி பின்னர் அவர்களுக்காக இறை வேண்டல் செய்யப்பட்டு பின்னர் அவர்கள் புதுப்படைப்பின் அங்கத்தவர்களாக அக்குடும்பமே உறுப்புரிமை பெறுகின்றது. இவ்வாறு எமது பங்கின் நூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இணைந்து கொண்டாலும் இன்று 38 அங்கத்தவர்களே காணப்படுகின்றனர்.

இவர்களுக்கென எமது ஆலயத்திற்கு அருகாமையில் மண்டபம் ஒன்றும் காணப்படுகின்றது. அம்மண்டபத்திலே வாராந்த, மாதாந்த செயல்திட்டங்கள் எமது பங்குத தந்தையின் அனுமதியுடன் நடைபெற்று வருகின்றது.

**வாராந்த நிகழ்வு**

1. திங்கள், செவ்வாய், வியாழன் - மாலை 7.00 செபமாலை
2. புதன், வெள்ளி – மாலை 6.00 திருப்பலி
3. சனி – மாலை 7.15 கூட்டம்
4. ஞாயிறு – வீடு சந்திப்பு

**மாதாந்தம்**

1. புதுப்படைப்பு குடும்பங்களுக்கான விசேட கருத்தமர்வு
2. மாதத்தின் முதல் வெள்ளி நற்கருணைவழிபாடு நடாத்துதல்
3. ஆலயம் சமூகம் சார்ந்த பணிகளில் அதிக அக்கறையோடு ஈடுபட்டு வருதல்
4. விசேட திருவிழா நாட்களில் சோடா பாட்டி போன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

சிறப்பாக இவர்களுக்குள் ஜெபக்குழுவினர் உருவாக்கப்பட்டு இறந்த வீடுகளில் வழிபாடு செய்தல், நோயாளர்களுக்கான வழிபாடுகள், நன்றி வழிபாடு, அன்பியங்களில் இறைவார்த்தை வழிபாடுகள் போன்றவற்றை நடாத்துகின்றனர். இவர்கள் குடிப்பழக்கம் இன்றியும், புகைத்தல் பழக்கம், வெற்றிலை போடுதல் போன்ற பழக்கம் இன்றியும் தீய வார்த்தைகள் பேசுதல் இன்றியும் நீண்டகாலமாக பயணிக்கின்றார்கள்.

இவர்களை கடந்த காலத்தில் உருவாக்கிய அருட்பணியாளர்கள், திருச்சிலுவை கன்னியர் மட அருட்சகோதரிகள், பெரியோர்கள் ஆகியோரையும் நன்றியோடு நினைக்கின்றோம். இறுதியாக எம் அன்புக்குரிய ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் இன்றும் எம்மோடு வாழுகிறார், ஒவ்வொரு ஆண்டும் எம்முடைய நன்றித்திருப்பலிக்கு எமது பங்கிற்கு வருகை தந்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதும், எம்மோடு இணைந்து புகைப்படம் எடுப்பதும் எல்லா வேளையிலும் இயேசுவின் மதிப்பீடுகளில் வாழுவதற்கு உற்சாகப்படுத்துவதும் பிற பங்குகளுக்கு சென்று உங்களுடைய சாட்சிய வாழ்வைச் சொல்லி, குடும்ப சந்திப்பு, நற்கருணை வழிபாடு, இறைவார்த்தை வழிபாடு நடாத்துவதற்கும் ஊக்கம் கொடுத்து வந்தார். அத்தோடு அடிக்கடி எமக்கு கூறும் வார்த்தைகள் ''நீங்கள் ஒவ்வொருவரும் யேசுவின் மடியில் தவழும் குழந்தைகள் உங்களுக்கு தேவை ஏதும் ஏற்படின் நான் உங்களை ஆயன் போல அரவணைத்து வழிநடத்துவேன்'' என்றும் உரைப்பார். இதன் அடிப்படையில் எமது மறைமாவட்டத்தின் தேவன்பிட்டி, அந்தோனியார்புரம், விடத்தல்தீவு, பண்டிவிரிச்சான், கோமரசன் குளம், கற்கிடந்த குளம், நொச்சிக்குளம் ஆகிய பங்குகளுக்குச் சென்று குடும்பங்களை சந்திப்பதும், நற்கருணை வழிபாடு செய்வதும், சாட்சியங்களை பகிர்ந்து கொண்டு மனமாற்ற வாழ்விற்கு அழைப்பதுண்டு. கடந்த ஆடி மாதம் (10.07.2022) அன்று எமது புதுப்படைப்பின் 18ஆவது ஆண்டு நிறைவின் நன்றித்திருப்பலியினை கலையருவியின் இயக்குனர் அருட்பணி. செல்வநாதன் பீரிஸ் அவர்களும், எமது பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளாரும் திருப்பலியினை ஒப்புக்கொடுத்து அன்றைய நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர். எனவே அன்புக்குரிய வாசகர்களே நீங்களும், உங்களுடைய பங்கும் இயேசுவிற்குள் புதுப்படைப்பாவோம். அதுவே ஆன்மீக விடுதலையின் வெற்றியும் ஆகும்.

அன்பிற்குரியவர்களே நீங்களும் எங்களுடைய பணிவாழ்வு பற்றிய அனுபவப்பகிர்வோ, இல்லங்களில் இறைவார்த்தை வழிபாடோ, நோயாளர் வழிபாடோ, ஆலயத்தில் நற்கருணை வழிபாடோ, நடாத்த வேண்டும் என்றாலும் உங்களுடைய பங்குகளில் மதுவிற்கு அடிமையானவர்கள் எண்ணிக்கை அதிகம் என்று நினைத்துக் கொண்டாலும் வீடுகளில் குடும்பம், அன்பியங்கள் செபிக்கின்ற செயற்பாடுகள் குறைவாக உள்ளது என தெரிந்து கொண்டால் உங்களுடைய பங்குத் தந்தையின் அனுமதியுடன் எம்முடைய பங்குத்தந்தையை தொடர்பு கொள்கின்ற போது எந்தவித நிதி உதவியுமின்றி, உங்களுடைய பங்கிற்கு இயேசுவின் இறையாட்சிப் பணியின் கனவினை நிஜமாக்க உங்களிடம் விரைந்து வருவோம். புது உலகம் படைப்போம் இயேசுவிற்குள் நாம் எல்லோரும் புதுப்படைப்பாவோம்.


**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டிலிருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1500/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 5000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.231
## கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம்

உங்கள் விடைகளை புரட்டாதி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | * | | | 02 |
| | * | * | 03 | | | | 04 | * | |
| | | | 05 | 06 | * | * | * | 07 | |
| | 08 | * | * | * | * | * | 09 | 10 | 11 |
| 12 | | 13 | | | 14 | * | | | |
| | * | | * | * | | * | | * | |
| 15 | * | | * | * | | * | * | * | * |
| | * | 16 | | | * | 17 | | | |
| | * | | 18 | | 19 | * | * | * | |
| 20 | | | | 21 | | * | | | 22 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. கிறிஸ்து பவுலை அனுப்பியது ...................... அறிவிக்கவே.
7. அமைதியுடன் ..........................வே அழைத்துள்ளார்.
12. நீங்கள் ஒன்றாகக்கூடி வந்து உண்பது ஆண்டவரின் திரு...................... அல்ல. (ஒரு எழுத்து இடம்பெயர்ந்துள்ளது)
16. அறிவு செறிந்த........................... வளத்தை அளிக்கிறார்.
17. நீங்கள் .................அதிகமாக ..............................கிறேன்.
18. ..................களைப் ...................... என்றா சொல்லுகிறேன்.
20. நானும் ஒரு .................................. அல்லவா?

**மேலிருந்து கீழ்**

1. கிறிஸ்துவின் ..................................... பங்குபெற உங்களை அவர் அழைத்துள்ளார்.
9. என் பெயரால் ...................... பெற்றதாக ......................... சொல்ல முடியாது.
10. கண் ......................ப் பார்த்து நீ எனக்குத் தேவையில்லை ——— முடியாது.
11. ஆவியார் ஒருவருக்கு ........................... செயல் செய்யும் ........................ அருளுகிறார்.
12. கடவுளின் கோ............................ தூயது.
14. உங்களிடையே .................................கள் வேண்டாம்.
19. ........................................... உங்களிடையே இருந்தபோது ——— நினைக்கவில்லை.

**வலமிருந்து இடம்**

2. நாங்கள் உலகத்தின்................................ போலானோம்.
4. உங்கள் பேச்சுதான் காற்றோடு ............................ப் போய் விடுகிறது.
5. பவுல் திருமுழுக்குக் கொடுத்தவர்களில் ஒருவர் காயு மற்றவர் ..........................
8. ஆற்றலைப் ............................ இறைவனிடம் வேண்டப்படும்.
11. உலகில் எத்தனையோ ...................... மொழிகள் உள்ளன.
13. தூய ஆவியானவர் துருவி ஆய்கிறார் ...................
14. மனைவி கணவரிடமிருந்து ........................... வாழக்கூடாது.
18. ............................. பிள்ளைகள் போல் இராதீர்கள்.
23. நமது .................................. அரை குறையானது.

**கீழிருந்து மேல்**

3. ......................... யறிவு ..........................என்னால் நீங்கள் அடையும் பயனென்ன?
6. நான் பறைசாற்றிய ........................ ஞானத்தின்—— வில்லை.
11.ஒருவர் மற்றவருக்கு எதிராக ......................... தொடரலாமா?
15. மரம்......................... வைக்கோல் ஆகியவற்றுள் எதையும் வைத்துக் கட்டலாம்.
16. நான் கட்டளையாகச் ............................. இதுவே.
20. .............................. தொண்டுகளும் பலவகையுண்டு
21. ஆண் தம்..................... மூடிக்கொள்ள வேண்டியதில்லை.
22. ..................................... ஒருபோதும் அழியாது.

1ம் பக்கத் தொடர்ச்சி

### பெரியகட்டு புனித அந்தோனியார்...

இந்தப் பெருவிழா சிறப்பான முறையிலே கடந்த ஆண்டுகளை விட சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இதற்கு முந்திய ஆண்டுகளிலே கொரோனா தொற்று காரணமாக சிறிய அளவிலே கொண்டாடப்பட்ட இவ்விழாவானது, அதிகளவான இறைமக்கள் கூட்டத்தோடு இணைந்து கொண்டாடப்பட்டது. தூர இடங்களிலிருந்து இறைமக்கள் பலர் கால்நடையாகவும், பேருந்துகளிலும் மற்றும் புகையிரதங்களிலும் வருகை தந்து அங்கே திருவிழாவில் கலந்து கொண்டார்கள். இதற்கு மேலாக விடுதிகள் அமைக்கப்பட்டு பல இடங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்து பத்து நாட்களுக்கு மேலாக தங்கியிருந்து, தியானங்கள் மேற்கொண்டு திருவிழா திருப்பலியில் கலந்து கொண்டார்கள். அதற்குரிய சிறப்பான ஆயத்தங்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து பெரியகட்டு பரிபாலகர் அருட்பணி. அன்ரனிற்றோ அருள்ராஜ் அடிகளார் மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.●

**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம்
தாமதிக்காமல் உடனடியாக வழங்கி,
உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

# நீங்காத நினைவுகள்

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 14 ✝ 04 ✝ 1947



உதிர்வு 15 ✝ 08 ✝ 2021

**அந்தோனிப்பிள்ளை (பண்டா)**
(காத்தான்குளம், நானாட்டான்)

"ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாளெல்லாம் நான் குடியிருக்க வேண்டும்."

வருடமொன்று ஓடிய பின்னும் வற்றாத நினைவோடு
நீரை வடிக்கிறது எம் விழிகள் அப்பா!
நாம் கண்ட முதல் உறவு நீங்கள் எம்மை தாலாட்டி வளர்த்த
எம் அன்புத்தந்தை நீங்கள்
வேலை என்று அதிகம் அலைந்தீர்கள் எமக்காய் உங்கள்
இரத்தத்தை தியாகம் செய்தீர்கள்.
அவனி எனும் நாடக மேடையில் - எம்மை பாதியில் விட்டுப் பிரிந்தீர்கள்
உங்களை நினைக்கும் போதெல்லாம் எமக்கு ஆறுதல் சொல்ல
முதலில் வருவது கண்ணீர் மட்டும் தான் அப்பா!
இறைவனின் திருப்பாதத்தில் உங்கள் ஆன்மா என்றும் இளைப்பாற
இறையருள் வேண்டுகின்றோம் உங்கள் உறவுகளாய்!

பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

**13, 12 ½ ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



ஆன் மேரி திரேசா
பயஸ் பிலிப்புப்பிள்ளை
(பெரியா)

மலர்வு: 27.08.1945
உதிர்வு: 06.08.2009



திறினிற்றி
அன்ரன் கமலநேசன்
(குஞ்சு)

மலர்வு: 29.04.1952
உதிர்வு: 08.02.2010

[கொன்வென்ட் வீதி, மன்னார்.]

"ஆண்டவர் தம் அன்பரின் சாவு ஆண்டவர் பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா 116:15)

அன்பான தெய்வங்களே!
எம்மைவிட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் ஆனாலும்
எம்மை விட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்,
சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார்,உறவினர் நண்பர்கள்.

தகவல்: கசியன் பிலிப்புப்பிள்ளை, லண்டன்.

**விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 229**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம்.

**இரண்டாம் பரிசு:**
T. M. பிரான்சிஸ்கா,
வங்காலை.

**மூன்றாம் பரிசு:**
சந்தியோகு போல் றொபின்சன்,
பெரியநீலாசனை.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 124 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 113 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.229ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

S. செபமாலை மார்க், வங்காலை. M. பிளன்ரீனா, மன்னார். X. குணமணி, மன்னார். M.S.கொவோன் குரூஸ், பேசாலை. M.S. றொஷிகா குரூஸ், பேசாலை. H. ஜெனிபர் பறுனாந்து, பேசாலை. S. றோசலின் குரூஸ், பேசாலை. N. சிபியன் பறுனாந்து, பேசாலை. N. கெயில் பறுனாந்து, பேசாலை. A.பெபிஷா, புதுக்கமம். A.அபி, புதுக்கமம். மு. தனமோகன், அடம்பன். த. ஷர்னிகா, அடம்பன். த. சுபத்ரா, அடம்பன். த.டரன்சியா, அடம்பன். S.U.தனுசிகா, மன்னார். J.லயனிகா, ஆட்காட்டிவெளி. J.பியூனிகா, ஆட்காட்டிவெளி. J.அனுசியா, ஆட்காட்டிவெளி. S. டென்சியா பெரேரா, பேசாலை. A.இருதயசுகன்யா, தேவன்பிட்டி. A.சுகணராஜ், தேவன்பிட்டி. T. தர்ஷிதா, யோசப்வாஸ்நகர். தவறாஜன் சந்தோஷ், யோசப்வாஸ்நகர். தொ. தேவராசா, சாளாம்பன். அ. சஞ்சிபவன், சாளாம்பன். அ. சஞ்சிகா, சாளாம்பன். அ. சிந்துஜன், சாளாம்பன். அ.சிரஞ்சி, சாளாம்பன். அ.மல்லிகா, சாளாம்பன். தே.இருதயமலர், சாளாம்பன். அ.அமிர்தநாதன், சாளாம்பன். லு. ஆன் ஆஷிக்கா, முருங்கன். கி. ஆன் கஸ்மிதா, மன்னார். வி. ஜெரினா றோஸ், பேசாலை. வி.ஜெனிவா றோஸ், பேசாலை. S. யுனிஸ்ரா லெம்பேட், வங்காலை. T. சஜீரன் லெம்பேட், அளவக்கை. T. தினேசன் லெம்பேட், அளவக்கை. செ. றக்ஷிதன், மன்னார். S.தேனியா, வட்டக்கண்டல். S. மேரி சஜித்தா, மன்னார். D.P. டிறைக்ஷா, விடத்தல்தீவு. D.P. டிறோமியா, விடத்தல்தீவு. புளொரன்ஸ் அந்தோனிப்பிள்ளை, நானாட்டான். த. தமிழரசி, அடம்பன். ச. யதுர்சிகா, மன்னார். றூ. மேரி பிறக்சி டயஸ், வங்காலை. ஆ. றூபன்ஜீசஸ் டலிமா, வங்காலை. றூ.ஹறிஸ்மா டலிமா, வங்காலை. S. பெலிஸிற்ராஸ், அடம்பன். ஸ். ஸ்ராலின், சாளாம்பன். றூ. யூட்ஸ்சிக்கா டலிமா, வங்காலை. J. யூடி ஜான்சிராணி, வலைப்பாடு. சு.சறோஜினி, ஜோசவ்வாஸ்நகர். J. பதுஸ்மி, தேவன்பிட்டி. சா. டெய்சி லியோன், முத்தரிப்புத்துறை. அ. ஏஞ்சலின், நானாட்டான். மு. லூட்ஸ் வேழினி, தாழ்வுபாடு. அ. சாள்ஸ் மொறாய்ஸ், முத்தரிப்புத்துறை. S. கனியூட்டா, முருங்கன். செ. சுகனியா, அடம்பன். T. ரேறியன், பள்ளிமுனை. R. லிவி பிகிறாடோ. பள்ளிமுனை. T. றேச்சல், பள்ளிமுனை. R. எமி பிகிறாடோ, பள்ளிமுனை. வி.வினோஜன், ஜோசப்வாஸ்நகர். A.வேணிஸ்ஷா, பள்ளிமுனை. யே. தர்சினி, வவுனியா. அம்புறோஸ் பெனிஸ்ரா நிமலினி குலாஸ், பேசாலை. நா. மீனா, நானாட்டான். ஜெ. பொலின், இலுப்பைக்கடவை. பி. செனோரிக்கா டலிமா, தலைமன்னார். அ. கௌசிகன் டயஸ், தலைமன்னார். F. பப்ரிஸ்ரா டலிமா, தலைமன்னார். A. ஏர்லினா, பெரியகமம். A. க்ளமெண்ட், பெரியகமம். J. மரிய புஸ்பமலர், பெரியகமம். க. நேர்த்திகா, நெடுந்தீவு. யூ. ஆன்வர்ஷா, ஆட்காட்டிவெளி. அ. அகஸ்ரீன், உயிர்த்த ராசன்குளம். A. அகஸ்ரீனா, உயிர்தராசன்குளம். பெ. விவேஹாசினி பச்சேக், பேசாலை. யூலியஸ் லிபின்சன், தேவன்பிட்டி. செ. சுகிர்தன் குரூஸ், தேவன்பிட்டி. யூ. யூயிஸ் (லின்சன்), தேவன்பிட்டி. றபேக்கா பற்றிக், சின்னக்கடை. கி. பாகிஷன். தேவன்பிட்டி. அ. ஸ்ரீகார்த்தன், தேவன்பிட்டி. அருள்யேசு சிறிதரன், நாச்சிகுடா. சிகானுஜா குரூஸ், நாச்சிகுடா. M.C. பற்றிக், சின்னக்கடை. J. சகாயநாதன், ஜிம்றோன்நகர். J. அற்புதராஜா, சின்னபண்டிவிரிச்சான். வி. மேரி றெஜினா, சின்னப்பண்டிவிரிச்சான். சி. வின்சன் யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான். மு. ஜெஸ்லினா, கங்காணிதீவு. D.P. டக்சன், மாவிலங்கேணி. D.P. சாறா, மாவிலங்கேணி.●

1ம் பக்கத் தொடர்ச்சி

### பெரியகட்டு புனித அந்தோனியார்...

இந்நிகழ்வில் மறைமாவட்ட ஆயர்தந்தை மற்றும் குருமுதல்வர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இத்திருப்பண்டமானது உயிலங்குளம், முருங்கன், கட்டையடம்பன், கற்கடந்தகுளம், மடுறோட் ஆகிய பங்குகளுடைய பிரதான சந்திகளில் மக்களின் வணக்கத்திற்காக மரியாதையுடன் காட்சிப்படுத்தப்பட்டு இறுதியாக பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலத்தில் வைக்கப்பட்டது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 31ம் நாள் நினைவஞ்சலி

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் இருக்கின்றது" (சா.ஞா 3:1)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1949 | 2022 |
| 12 | 07 |
| 08 | 13 |



**எ. யக்கோவா** (சூரியகட்டைக்காடு)

உன் நினைவுகளின் நிழலில் கடந்து முப்பத்தோராம் நாள் இருளிலும் தொடரும் நிழல் போல - என்றும் எம் மனதில் உன் நினைவே - காலங்கள் கடந்தும் மாறாத உன் வதனம் கண்காணா ஒரு நொடியும் ஆழ்துயரே அமைதியின் உருவமாகவும் அடக்கத்தின் இருப்பிடமாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் எம் மத்தியில் அன்பு ஒளியாய் இருந்த உத்தமியே! மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை. எத்தனை துயரம் வந்தாலும் உன் அன்புமுகம் காண கரைந்திடுமே உன் வதனம் கண்காணா ஒருநொடியும் என்றும் எமக்கு ஆழ்துயரே! உம் ஆன்மா இறைசந்நிதானத்தில் நித்திய அமைதி அடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"சீவியத்தில் நேசித்தோம், மரணத்திலும் மறவோம்"

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02.12.1944 | 07.09.2021 |



**பிறிஜற் மேரி பிறீடா பொன்ராஜா**
புத்திரகண்டான், முருங்கன்

ஈராறு மாதங்கள் கடந்து விட்டாலும்
உங்கள் பாச நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை
நாம் வாழ்ந்த நாட்களும், எங்கள் மீது நீங்கள் காட்டிய
அன்பும், அக்கறையும், கண்டிப்பும்
என்றுமே எங்கள் நினைவைவிட்டு நீங்காது.
எங்களுக்காகவே வாழ்ந்து மறைந்த உங்கள் அன்புக்கு
நன்றியோடு, இறைவனின் தூய சந்நிதியில் நீங்கள்
அமைதியில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 | 07 |
| 09 | 09 |
| 1949 | 2020 |



**அமரர். ஜெகனாதன் வெற்றிமேரி துரம்**
(பேசாலை)

அன்பின் உருவே! எங்கள் பண்பான பாசமான அம்மா!
ஈராண்டுகள் கடந்தாலும் பாசத்தில் பழகுவதில்
எம்மை உரமூட்டி வளர்த்து விட்டு பண்பாய் வாழ்வதையும்
எங்களுக்கு கற்றுத் தந்துவிட்டு சென்றீர்களே அம்மா
ஈன்றாய் நீ எம்மை இன்பமுடன் உன் பிள்ளைகளாய்
உன் வயிற்றில் பிறந்திடவே என்ன தவம் செய்தோம் அம்மா!
ஏங்கித் தவிக்கின்றோம் உன்னை நான் மீண்டும் பார்ப்பதற்கு
ஐயகோ! எம்மை தனியே தவிக்க விட்டு
தந்தையிடம் சென்றாயோ நீயே
ஒரு தடவை அம்மா என்று ஆசையுடன் நாம் அழைக்க
ஓடோடி மீண்டும் வரமாட்டாயா அம்மா! ஏங்குகின்றோம் நாம்
மறவோம் மறவோம் இம்மண்ணில் எந்நாளும் உன்னை அம்மா!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார்,உறவினர்கள்

## விண்ணக வாழ்வில் ஈராண்டு நினைவலைகள்

"இதோ உம்மைப் பெயரிட்டு நாமே அழைத்தோம் நீ எனக்கு சொந்தம்" (எசா 43:1)

| அன்னை மடியில் | அன்னை மடியில் |
|---|---|
| 19 | 05 |
| 12 | 08 |
| 1998 | 2020 |



**செல்வன். இருதயநாதன் றோமியோ குரூஸ்**
(றோமி)
(காயாக்குளி, முள்ளிநகர்)

தாயவள் கருவினில் இருவராகி தனியொருவனாய் தரணியில் உயர்ந்து நின்றவனே!
மனித சதியாலும், வீதியின் விபரீத விளையாட்டாலும் வித்தாகிப் போனவனே
விழிநீரின் ஈரம் காயும் முன்னே ஈராண்டு நிறைவில் உன் தந்தை தாய்
உன் உடன்பிறப்புக்கள், அத்தான் மருமகன்மார்...
றோமியோ என்று உனை அழைத்தோம் எங்கள் பாசத்தின் ஒளியை
உள்ளில் மகிழ்ந்தோம். வளரும் பருவத்தில் நீ மறைந்தாய்
எங்கள் வாழ்க்கையில் உம் பிரிவு வலிக்குதடா...
காலனவன் விரித்த வலையில் தடம் தெரியாமல் கண் இமைப்
பொழுதில் மாட்டிக் கொண்டாய் இது மனித சதியா! இல்லை விதியா?
விடை தெரியாமல் ஏங்குகின்றோம்?... ஆசைகள் எத்தனையோ உன் மனதில்
எல்லாம் மறைந்து போனதே? பவனிவந்த காலம் இன்ற பாலகிப் போனதடா!
கண் விழித்து கடல் சென்றாய்யே நீ
கண்மூடிக் கிடப்பதற்காகவா? நீ இறைவனில் இள்புற
தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார், அத்தான்,
மருமகன்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 4ம், 3ம் ஆண்டு நினைவஞ்சலி





| சந்தாம்பிள்ளை கபிறியேற்பிள்ளை | கபிறியேற்பிள்ளை சூசையானாள் |
|---|---|
| மண்ணில் : 1930.08.30 | மண்ணில் : 1936.02.10 |
| விண்ணில் : 05.09.2018 | விண்ணில் : 16.08.2019 |

(மானங்கவெளி, முருங்கன்)

அன்பின் இலக்கணமாய் பாசத்தின் திரு
உருவமாய் திகழ்ந்த அன்பு பெற்றோரே
ஆண்டுகள் நான்கும், மூன்றுமாய்
உருண்டோடியதே...
ஆண்டவன் மடியில் அமைதியாய் இளைப்பாற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 | 13 |
| 01 | 08 |
| 1928 | 2015 |



**திரு. ஞானப்பிரகாசம் சூசைமுத்து**

அன்பு அப்பா கடந்த 13.08.2015இல் நீங்கள்
எம்மைவிட்டு பிரிந்து ஏழு வருடங்கள் ஆனாலும்
உங்கள் அருமை இழந்து தவிக்கின்றோம்.
அப்பா! மௌனம் உங்கள் தாய்மொழி அல்லவே! உங்கள்
சிம்மக்குரலை எம்மருகில் கேட்காவிடிலும் நீங்கள் எங்கும்
போய்விடவில்லை என்ற உணர்வு எம்மிடம் உள்ளது.
ஆன்மீக காரியங்களில் உங்களது அக்கறையும்
கரிசனையும் அளப்பரியது.
நோயென்று படுக்காது யாரையும் வருத்தாது
அமைதியில் இளைப்பாறிட எல்லாம்வல்ல இறைவன்
உங்களுக்கு நல்ல மரணத்தைக்
கொடுத்தருளினார். உங்களது ஆன்மா இறை சந்நிதியில்
இளைப்பாறிட செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 18 |
| 08 | 08 |
| 1974 | 2014 |



**அருட்பணி. தேவதாசன் எட்வின் (அமதி)**
(வீடத்தல்தீவு)

திரை சூழ்பதி பிறந்த திருவே
அமரர் பதி சென்ற காரணம் ஏதோ
தவமணியம்மை மடி தவழ்ந்த குருவே
கவலைகள்ள எம் விழிக்களித்ததேனோ
அழைத்த அமலன் குரலேற்று
அவனியை நீர் துறந்தாலும்
நீங்காது எம் மனதில்
நிரந்தரமாய் வசித்திடுவீர்
எட்டாண்டுகள் புரண்டாலும்
எம்மிதயத்தில் வாழ்பவரே
இறையுடன் நீர் கலந்திடவே
இறைவனிடம் இரைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் பாசமுள்ள
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

## 50ம், 36ம் ஆண்டு நினைவஞ்சலி





| திரு. விறாஸ் அலஸ் | திருமதி. அலஸ் அக்னேசியா |
|---|---|
| பிறப்பு : 1917.10.07 | பிறப்பு : 1926.12.05 |
| இறப்பு : 1972.08.22 | இறப்பு : 1986.08.30 |

(வஞ்சியன்குளம்)

அன்பின் திருவுருவங்களே!
ஆண்டுகள் ஐம்பதும், ஆறாறும் கடந்தாலும்
இனிய உங்கள் அரவணைப்பை
மறக்க முடியுமா?
ஈர்நான்கு செல்வங்களை ஈன்று இகமதில்
உயர்வடைய வளர்த்தீரே!
உயிருள்ளவரை உறவுகள் யாவரும்
நீவிர் இருவரும் வான்வீட்டில் இன்புற்றிருக்க
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் பிரிவின் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 | 21 |
| 10 | 06 |
| 1950 | 2021 |



**திருமதி. யோசப்பின் செல்வம் பெர்னாண்டோ**
(வங்காலை - மன்னார்)

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் மகுடமாய், இகமதில் வாழ்ந்த எம் அம்மாவே!
அனைவரையும் அன்பு செய்து அனைவராலும் அன்பு
செய்யப்பட்டு நீங்கள் வாழ்ந்த அழகான வாழ்க்கைக்காக
இறைவனுக்கு நன்றி சொல்கின்றோம்.
உங்கள் அன்பான பேச்சும், ஆதரவு நிறைந்த அரவணைப்பும்
இனி எப்போது எமக்கு கிடைக்குமென்று ஏங்குகின்றோம்.
எம் வாழ்நாட்களை வசந்தமாக்கி விட்டுச் சென்ற வாடாத மலரம்மா
நீங்கள் நாள்தோறும் உம்முகம் காணாமல் நாங்கள் தவிப்பது
உமக்குத் தெரிகிறதா அம்மா, சடுதியாக விடை சொல்லி
நீ சென்று விட்டாய். எம் கண்கள் மட்டுமல்ல
எம் உள்ளமும் அழுவதை நீ அறிவாயோ அம்மா,
கருவினில் எம்மைச் சுமந்த உன்னை காலந்தோறும்
எம் நெஞ்சினில் சுமந்திருப்போம் அம்மா!
எப்போதும் ஆண்டவன் இல்லத்தில் அமைதியுடன் இளைப்பாற
நித்தமும் நாம் இரஞ்சுகின்றோம் அம்மா!

உம் பிரிவால் நினைந்துருகும்: கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 | 16 |
| 12 | 08 |
| 1931 | 2018 |



**அமரர். செல்லத்துரை திரேசம்மா**
(நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்)

அம்மா எமைவிட்டு பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும்
ஒவ்வொரு விடியலும் உம் நினைவுடனேயே உதயமாகின்றது
அன்பு உள்ளத்தின் அதிபதி நீதானம்மா ,
அன்போடு எம்மை வளர்த்து, அனைவரையும்,
அரவணைத்து, அன்பை கற்றுத்தந்தவளும் நீதானம்மா...
அயலவரையும் உறவுகளையும் உள்ளத்தால் இணைத்து,
மனதால் மகிழ்வு கண்டவரும் நீதானம்மா...
இற்றுவிடா இனிய வாழ்வை எமக்களித்து,
அதில் மகிழ்வு கண்டவளும் நீதானம்மா...
காலை, மாலை இருநேரமும் ஆண்டவன் திருக்கோயிலுக்கு
கால் நடையாய் சென்று, அனைவரின் நல்வாழ்வுக்குமாய்
செபமாலை ஓதிடுவீரே அம்மா...
இனி எப்போ உம்முகம் காண்போம்?
தாயே உம் ஆன்மா இறைவன் சந்நிதியில் எந்நாளும்
இன்புற்றிருக்க இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம் நாம்.

உம் பிரிவால் நினைந்துருகும் : குடும்பத்தினர்

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 27 |
| 08 | 08 |
| 1958 | 2021 |



**அமரர். அ. இமாக்குலேற்றா (சறோ)**
(அவுஸ்ரேலியா)

உங்களது அன்பு முகம் மறைந்தாலும்
அழியாதது விட்டுச் சென்ற நினைவலைகள்
ஆண்டு ஒன்று கடந்து செல்லலாம்
என்றும் மறையாத நினைவுகள்
எம்முடன் நினைத்துக் கொண்டு வாழ்கின்றோம்.
இவ்வுலகில் நீண்ட கால நினைவுகளை எண்ணியே
பாசமிகு தாயாக பாரினிலே பரிவுடன்
வாழ்ந்த காலம் நெஞ்சினிலே
உங்கள் ஆன்மா இறைவன் அருளில் இளைப்பாற
எந்நாளும் வேண்டி நிற்கின்றோம்.

உம் பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org